விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை (26.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128





வன்னியில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் காத்திருக்கும் காயமடைந்த பொதுமக்கள்.




தாக்குதல் அச்சத்தில் லொறிக்கு கீழ் பாதுகாப்பு தேடும் பெண்.

## உடனடியாக யுத்த நிறுத்தம் வேண்டும்

# இராணுவத் தீர்வு காண முற்பட்டால் இலங்கையின் ஒற்றுமைக்கு ஆபத்து

## முதற் தடவையாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இலங்கை அரசுக்கு எச்சரிக்கை



(வாஷிங்டன்)

இலங்கையில் நடைபெற்றுவரும் சண்டையால் அப்பாவி மக்களுக்கு ஏற்பட்டுள்ள துயரம் கவலையளிக்கிறது. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக சண்டையை நிறுத்த வேண்டும். இவ்வாறு அமெரிக்க அதிபராக பராக் ஒபாமா பொறுப்பேற்றதன் பின்னர் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் வெள்ளை மாளிகை நேற்று முதல் முறையாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்காலில் நேற்றும் 174 பேர் பலி

(வவுனியா)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று இடம்பெற்ற விமான குண்டுத்தாக்குதலில் 174 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 212 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த குடியிருப்பு மீது நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் சிறிலங்கா வான் படையின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளித்து மூன்றாம் தரப்பிடம் சரணடைய வேண்டும்

## அமெரிக்கா கோரிக்கை

(வாஷிங்டன்)

இலங்கையில் மோதல்களை முடிபுக்குக் கொண்டுவரும் வகையில் புலிகள் ஆயுதங்களைக் கையளித்து மூன்றாம் தரப்பொன்றிடம் சரணடைய வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் றொபேர்ட் வூட் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்களை தடுத்து வைத்து அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதை புலிகள் நிறுத்த வேண்டும். தமது ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அவர்கள் மூன்றாம் தரப்பு ஒன்றிடம் சரணடைய வேண்டும் என்று வூட் தெரிவித்துள்ளார். இலங்கையில் மோதல்களை முடிபுக்குக் கொண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினர்–புலிகள் கடும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரால் மீட்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த விடுதலைப்புலிகளிடம் எஞ்சியுள்ள மிகச்சிறிய பகுதியில் இன்னமும் கடுமையான மோதல்கள் நடந்து வருவதாக அங்கு தங்கியுள்ள அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த.உயர்தரபரீட்சை -2008 இல் 3A,2AB சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பு சிறப்பு மலர்.

## மோதல் இடம்பெறும் பகுதியிலுள்ள மக்களை மீட்க ஐ.நா. தீவிரம்

## விரைந்து வருகிறார் ஹோம்ஸ்

(வாஷிங்டன்)

இலங்கையில் தொடர்ந்து வரும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

மோதல்கள் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு வலயங்களில் சிக்கியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட வேண்டும். மோதல்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

சங்கானையில் புதுப்பொலிவுடன் மிளிரும் ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

அட்சய திருதியை

27.04.2009 திங்கட்கிழமை அட்சய திருதியை தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கோர் இனிய செய்தி. அன்றைய தினம் தங்க நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் விசேட விலைக் கழிவு வழங்கப்படுவதுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இல. 10, பஸ் நிலையம், சங்கானை.



## இடம் பெயர்ந்தோருக்கு உதவ முடியாமல் வவுனியா திண்டாடுகிறது

# ஒருவேளை உணவுக்குக் கையேந்தும் அவலம்

# எங்கும் மக்கள் துயரம்; உதவுமாறு அழைப்பு


படம்: றொய்ட்டர்

வன்னியில் மோதல் தவிர்ப்புப் பிரதேசத்திலிருந்து கடந்த 20ஆம் திகதி முதல் வந்து சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்டு வருவதால். வவுனியா நகரம் இடம் பெயர்ந்த வன்னி மக்களால் நிரம்பி வழிகிறது.

பஸ்களிலும், வீதியோரங்களிலும் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட பல கட்டங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியுள்ளனர். மேலும் வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்ட வண்ணம் உள்ளனர்.

உடைமைகள் அனைத்தையும் இழந்து பல மாதங்களாக வன்னியில் யுத்தகளத்தில் போதிய உணவு, மருத்துவ, வசதிகளின்றி வாழ்ந்த களைப்புடன் கடுமையான பசியும், தாகமும் வாட்ட, சீரான உடைகள் எதுவுமின்றி நடைப்பிணங்கள் போல இவர்கள் வவுனியாவை வந்தடைந்துள்ளனர்.

பலர் இன்னமும் அவர்கள் அழைத்து வரப்பட்ட பஸ்களிலேயே தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் சில தற்காலிக தங்குமிடங்களில் வயோதிபர்கள் சிலர் உயிரிழந்த நிலையில் அவர்களது உடலை அகற்றவும் வசதியில்லாத நிலையில் மக்கள் இருப்பதாகவும் தொண்டு நிறுவனப் பணியாளர் ஒருவர் கூறினார்.

ஏற்கனவே கடந்த பல மாதங்களாக வவுனியாவுக்கு வந்த சுமார் 70ஆயிரம் பேர் வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதிலேயே அரசாங்கமும் தொண்டு நிறுவனங்களும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளன.

பெரும்பாலான முகாம்களில் போதிய இடவசதி இன்மை, மலசல கூடவசதியீனம், சீரான நீர் விநியோகம் இல்லாத நிலை என்று மக்கள் ஏற்கனவே பெரும் துன்பங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந் நிலையில் திடீரென ஓர் இரு தினங்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருப்பதால் இவர்களுக்கு வேண்டிய அவசர உதவிகளை செய்ய முடியாமல் அரசாங்கமும் தொண்டு நிறுவனங்களும் திண்டாடுவதாக தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இவ்வளவு தொகை மக்களுக்கும் உணவு சமைத்து வழங்குவது சாத்தியமில்லை என்பதால் அவர்களை சுமார் 250 பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து பெரிய சமையல் பாத்திரங்களையும் அரிசி மற்றும் மரக்கறிகளையும் வழங்கி தாமே சமைத்து உண்ணும் நிலைமையை ஏற்படுத்த முனைவதாக ஐ.நா. தொண்டுப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவேனும் இவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கே இப்போது நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என்றார் அவர்.

உடனடிப் பசியையும், தாகத்தையும் போக்குவதற்கு பிஸ்கட் பெட்டிகளும், போத்தலில் அடைக்கப்பட்ட நீரும் வழங்குவதே மிகவும் பொருத்தம் என்று குறிப்பிட்ட அவர் இந்த மக்களுக்கு உதவ விரும்புவர்கள் இவற்றை பெருந் தொகையாக வாங்கியோ அல்லது அதற்கான பணத்தைக் கொடுத்தோ உதவி செய்யலாம் என்றும் தெரிவித்தார்.

தற்போதையநிலைமையில் அரசாங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்களை மாத்திரம் நம்பியிராமல் அவலப்பட்டுள்ள இந்த மக்களுக்கு உதவுவதற்கு இந்த நாட்டிலுள்ள மக்களும் புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்களும் முன்வரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (ந-5)

## வன்னிப் பேரவலம்; மரண ஓலம்

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பலர் சித்தம் கலங்கியவர்களாக உள்ளனர்

## வைத்தியர்கள் அதிர்ச்சித் தகவல்

மோதல் பகுதியிலிருந்து வெளியேறியுள்ள பல்லாயிரக் கணக்கானவர்களில் பெருந் தொகையானோர் மோசமான படுகாயங்களுடன் நோயுடனும் ஆஸ்பத்திரிகளுக்கு வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போது சிலர் வாகனங்களில் இறந்து விடுகின்றனர்.

அத்துடன் தமது அன்புக்குரியவர்கள் தமது கண் முன்னால் கொல்லப்படுவதைக் கண்ட பலர் நினைவாற்றல் அற்றவர்களாக-பித்துப் பிடித்தவர்களாக இருப்பதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

காயமடைந்து கொண்டு வரப்பட்டவர்களில் 75 சத வீதமானோர் குண்டு வெடிப்பினால் காயமடைந்தவர்களாவர். ஏனையோர் துவக்கு சூடு, கண்ணி வெடிகளால்காயமடைந் தவர்கள் என வவுனியா ஆஸ்பத்திரியில் பணியாற்றும் எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பை சேர்ந்த போல் மக்மாஸ்ரர் றொய்ட்டர் செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார்

கால்களின் கீழ்ப்பகுதியில் கடும் காயமடைந்தவர்களாக பலர் உள்ளனர். நாம் அவற்றை அகற்ற வேண்டியுள்ளது. 19 வயது பெண் ஒருவர் குழந்தைக்கு பாலூட்டுபவர் சிகிச்சைக்கு வந்துள்ளார். அவரின் காலின் பகுதியை அகற்ற வேண்டியிருந்தது. அவரினதும் பிள்ளையினதும் எதிர்காலம் குறித்து எனக்கு திகைப்பாக இருக்கிறது என்று அந்த மருத்துவர் கூறியுள்ளார்.

பலர் அதிர்ச்சியடைந்தவர்களாக இருப்பதாகவும் அவர்களுக்கு உளரீதியான ஆதரவு தேவையெனவும் அவர்கள் உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் புல்மோட்டை வைத்தியசாலையிலுள்ள டாக்டர் ஈ.ஜி ஞானகுணாளன் கூறியுள்ளார்.

ஒரு பெண் ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளார். அவர் தனது கணவன் பிள்ளைகளுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது வீட்டின் மீது ஷெல் வீழ்ந்துள்ளது. கணவனும் பிள்ளைகள் சிலரும் இறந்து விட்டனர். அப் பெண் தனது இரு கால்களையும் இழந்துள்ளார். அழுது கொண்டிருக்கும் அப் பெண் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறார். இதனைப் போன்று பல துக்கமான சம்பவங்கள் உண்டு என்று கூறிய டாக்டர் ஞானகுணாளன், மார்ச் நடுப் பகுதி வரை 6400 பேருக்கு இந்த வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. சுமார் 500 பேருடன் ஒவ்வொரு வாரமும் மூன்று தொடக்கம் நான்கு கப்பல்கள் மோதல் பகுதியிலிருந்து ஆட்கள் ஏற்றி வரப்படுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிகின்றன. இருவர்ஒரு கட்டிலிலும் மற்றொருவர் கட்டிலுக்கு கீழேயும் தங்கியுள்ளதாக இலங்கையிலுள்ள எல்லைகளற்ற மருத்து அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் லிசாபெத் லிஸ்ற் றொய்ட்டருக்கு தெரிவித்தார்.

நடைபாதைகளில் பலர் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் வார்ட் ஒன்றில் அதிகளவானோர் அனுமதியளிக் கப்பட்டதால் சகல கட்டில்களையும் ஒன்றாக சேர்த்து நோயாளரை அனுமதித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் மோதல் பகுதியிலிருந்து வருவோர் பசியுடனும் தாகத்துடனும் காணப்படுகின்றனர். முகாமை வந்தடைந்த ஒருவர் தாகத்தால் ஏற்பட்ட வரட்சியால் மயங்கி வீழ்ந்து இறந்ததை பணியாளர்கள் பார்த்ததாக லிஸ்ற் தெரிவித்தார்.

அதே சமயம் மோதல் பகுதியிலிருந்து வருவோர் மிக மோசமான நிலையில் இருப்பதாக இலங்கையிலுள்ள ஐ.நா. பேச்சாளர் ஜோர்டொன் வெய்ஸ்சும் கூறியுள்ளார். முகாம்களிலுள்ள சிறுவர்களில் கால்வாசிப் பேர் போஷாக்கின்றி இருப்பதாகவும் ஆரோக்கியமின்றி காணப்படுவதாகவும் ஐ.நா. மதிப்பீடுகள் தெரிவிப்பதாக அவர் சுட்டக்காட்டியுள்ளார். (ந-5)

**Raveens English Medium Classes Karaveddy**

மேற்படி நிறுவனத்துக்குரிய Grade 11 மாணவர்கள் பங்கு பெறும்

IMPROMPTU ORATORY (ENGLISH)

முன் ஆயத்தமில்லாப் பேச்சு (ஆங்கிலம்)

*குறிப்பு:-* சபையோர் வழங்கும் தலைப்புகளுக்கே பேசுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

*இடம்:-* யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம்,கரவெட்டி (அருகாமை)

*காலம்:-* இன்று (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

*தலைவர்:-* இ.இராகவன் (அதிபர், யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி)

பிரதம விருந்தினர்
திரு.வை.செல்வராசா
(வலயக் கல்விப் பணிப்பாளர் வடமராட்சி வலயம்,புலோலி)

*ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

-நிர்வாகத்தினர்

*English is a Global Language.*

(C-2422)

**மணமகள் தேவை**

இந்து வேளாளர் கனடா பிரசா உரிமையுடைய 28 வயது பூசம் 2ஆம் பாதத்தையுடையவருக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு:
0771877270

(2557)

## உடற்கல்வி போட்டிகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான உடற் கல்விப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-10)

## இடைத்தங்கல் முகாம்கள் அமைந்துள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள்

(அல்வாய்)

வடமராட்சியில் இடைத்தங்கல் முகாம்கள் பாடசாலைகளில் அமைந்துள்ளதையடுத்து கல்வி நடவடிக்கைகள் காலை 7 மணி முதல் 11.30 மணிவரையும் பின்னர் நண்பகல் 12.00 மணி முதல் 4 மணிவரை நடைபெறவுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதற் கட்டமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மாலை நேரமாக வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய பாடசாலைகளான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மற்றும் வட இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இடைத்தங்கல் முகாம்களாக ஆக்கப்படின் உடுவில் மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, ஆகியவற்றில் மாலை நேர பாடசாலையாகவும் வட இந்து மகளிர் கல்லூரி, யாழ் புற்றளை மகா வித்தியாலயத்தில் மாலை நேர பாடசாலையாக இயங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-19)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50-80 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 160 | 140 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 30 | 40 |
| பூசணி | 15 | 20 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 30 | 35 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40-60 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 |
| பயிற்றங்காய் | 40 | 40 |
| லீக்ஸ் | 140 | 160 |
| போஞ்சி | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 40 |

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோகேந்திரா நிலையத்தினால் திடப்புலம் புன்னாலைக் கட்டுவன் நரசிங்க வைரவ ஆலய மகோற்சவ காலங்களில் ஆலய மண்டபத்தில் நிலைய தலைவர் நா. நவராஜ் தலைமையில் நடைபெற்று வரும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்வில்,

இன்று ஞாயிற்றுக்கிழமை 'வள்ளுவர் கூறும் வாழ்வியல் தத்துவம்' என்னும் விடயத்தில் சிதம்பரநாதன் சசீவனும் நாளை திங்கட்கிழமை "தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே" என்னும் விடயத்தில் சைவப் புலவர் சைவ சிந்தாந்த பண்டிதர் கந்த சத்தியதாசனும் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-4)

## சீரணி மணி மண்டபம் திறப்பு விழா

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக் கப்பட்ட சீரணி மணி மண்டபம் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்ல ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் நிகழ்த்துவதுடன் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திரு முருகன் மணி மண்டபத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஓ-4)

## கட்டடத் திறப்புவிழா

சண்டிலிப்பாய் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் சனசமூக நிலைய புதிய கட்டடதிறப்பு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஜெயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச சபை செயலர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் கலந்து கொள்வதுடன் முன்னாள் பிரதேச சபை தலைவர் வே. மகேந்திரன் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஓ-4)

## சங்காபிஷேகம்

வடமராட்சி அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பலம் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறு வருகின்றது. இதில் இறுதி நாளான மே மாதம் முதலாம் திகதி 1008 சங்காபிஷேகம் நடைபெறுவுள்ளது. (ஓ-4-10)

## உள சமூகப் பணியின் நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சாந்திகம் பணியாளர்களால் நடத்தப்படும் "குழுக்களாய் ஒன்றிணைவோம்" எனும் சாந்திகம் Cord aid திட்டத்தினால் கரவெட்டி பிரதேச செயலக பிரிவின் கீழ் உடுப்பிட்டி J/352 கிராமசேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சமுதாய மட்டத்திலான உள சமூக பணியின் நிறைவு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இலகடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## வாரம் ஒரு தகவல்

## வெள்ளி விழா

"ஏன் சேர் அழுகிறீர்கள்"

"இன்றைக்கு என்னுடைய திருமண நாள். எனக்கு திருமணமாகி 25 வருடங்கள் ஆகிவிட்டது. வெள்ளிவிழா"

"இதில் அழுவதற்கு என்ன இருக்கிறது?"

"முடியவில்லையே..."

"சரி, கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள். பார்க்கிறவர்கள் சிரிக்கப் போகிறார்கள். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? உண்மையான வாழ்க்கையே திருமண நாளிலிருந்துதான் தொடங்குகிறது என நினைப்பவர்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்."

"அப்படியா?"

"பழங்கால கிரீஸ் நாட்டில் பெண்களைப் பார்த்து உங்கள் வயது என்னவென்று கேட்டால் அவர்கள் பிறந்த நாளிலிருந்து கணக்கிட்டுச் சொல்லமாட்டார்களாம். திருமண நாளிலிருந்து தான் கணக்கிட்டுச் சொல்வார்களாம். திருமண நாளிலிருந்து தான் உண்மையான வாழ்க்கை தொடங்குகிறது என்பது அவர்களது நம்பிக்கை."

"எனக்கு திருமணமாகி 25 வருடங்கள் ஆகிறது. நான் அப்பொழுதே கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்திருந்தால் என்னுடைய உண்மையான வாழ்க்கை இன்றிலிருந்து தான் தொடங்கியிருக்கும்."

"என்ன சொல்கிறீர்கள்?"

"நானும் அவளும் திருமணத்துக்கு முன் யாருக்கும் தெரியாமல் அடிக்கடி கடற்கரையில் சந்திப்பது வழக்கம். ஒருநாள் அவளுடைய அப்பா எங்களைக் கையும் களவுமாய் பிடித்துவிட்டார். உடனே ஒரு கண்டிஷனும் போட்டார்."

"என்ன கண்டிஷன்?"

"இப்பொழுதே என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் 25 வருடங்கள் சிறையில் தள்ளி விடுவேன். இது இரண்டில் எது வசதி?" என்றார்.

"கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றீர்களா?"

"ஆமாம் சேர். அங்கே தான் தவறு செய்து விட்டேன். அதை நினைத்தால் தான் அழுகை வருகிறது."

"ஏன்?"

"அப்பொழுதே நான் சிறை செல்ல சம்மதித்திருந்தால் இன்றைக்கு விடுதலையாகியிருப்பேனே."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## இராசி பலன்

*26.04.2009*
*(சித்திரை 13, ஞாயிற்றுக்கிழமை)*
*பிரதமை முற்பகல் 8.05 மணிவரை*
*பரணி பிற்பகல் 12.33 மணிவரை*
*இராகுகாலம் 4.29-5.59 மணிவரை*
*சுபநேரம் 8.59-10.29 மணிவரை*
*சிறுதொண்டர் குருபூசை, கார்த்திகை விரதம்*

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், மாதர் நட்பு, போசன சுகம், சிந்தனைமிகுதி. |
| இடபம் | பிறருக்கு உதவுதல், குடும்பக் கவலை, சயனசுகக் குறைவு, வேலைச்சுமை. |
| மிதுனம் | நண்பர்கள் நல்வரவு, தனலாபம், ஆனந்தம், காரிய அனுகூலம். |
| கடகம் | நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், தொழில் மேன்மை, விருந்துபசாரம். |
| சிங்கம் | சீரப்பிரயாசை, அஜீரணக் கோளாறு, தந்தை வழி உறவு, திடீர் பயணம். |
| கன்னி | அபகீர்த்தி, எதிர்பாராத பகை, முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, மனோதைரியம், கீர்த்தி, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | நினைத்த காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், உடல் நலம், தொழில் விருத்தி. |
| தனுசு | புத்திரரால் கவலை, உடல் நலக் குறைவு, முயற்சி கைகூடும், மரியாதைக்குறைவு. |
| மகரம் | தொழில் சிந்தை, தாய்வழி உறவு, முயற்சி தாமதம், சுபசெலவு. |
| கும்பம் | கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, மனோதைரியம், பொருள் சேர்க்கை. |
| மீனம் | பேச்சு வன்மை, தொழில் சிந்தை, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |

வளவன்

## -:எழுந்திரு:-

நந்திக்கடல் சிவப்பாகி
நரிகள் எல்லாம் ஊளையிடுது
எங்கள் பிஞ்சுக் குழந்தை
உடல் சிதறி
பஞ்சாய்ப் பறந்து போகுது
அவருக்கு முதுகுவலி
மற்றவருக்கு நெஞ்சுவலி
எவருக்கு புரியும் எங்கள் உயிர்வலி
எவர்வரினும் வராவிடினும்
எழுந்திரு மகளே
எங்களுக்கான கிழக்கு
இனித்தான் வெளுக்கும்
இவர்கள் எழுதுவது
முடிவுரையல்ல...
முகவுரை...
போட நினைப்பதோ
முற்றுப்புள்ளியை
போட்டு முடித்திருப்பதோ
கேள்விக்குறியை.

அவைக்கவி.

## விடை தேடுகிறேன்

என் இதயத்தில் சொட்டு அழுகை
நகரத்தில் கொட்டும் மழைபோல்
சோர்வடைந்து உறைந்து போன
என் இதயத்தை ஊடுருவியது எது?

ஏ! மழையில் எழும் மிருதுவான ஒலி
கூரையிலும் பூமியிலும் முடிவது போல்
என் மனதில் எழும் காழ்ப்புணர்வு
மழையில் சங்கமமாயிற்று.

காரணமில்லாத அழுகை
களங்கமில்லா நெஞ்சத்தை வருடிய
வேதனையால்
ஏன், கருத்தொன்றாத எண்ணங்களால்
காரணமில்லை அன்றியும் சோகமே

தாங்க முடியாத இந்த சோகம்
விடை தேடுகின்றேன் முடியவில்லை
அன்புமில்லை அன்றில் வெறுப்புமில்லை
என் இதயம் விசனமாயுள்ளது.

போல் வெர்லெயன் (1844-1896)
தமிழாக்கம் :
அருட்சகோதரி செல்வஜோதி

## குருமூர்த்திகளுக்கான கட்டட அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கத்தினால் குரு மூர்த்திகளுக்கான கட்டட அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை திங்கட் கிழமை பகல் 11.30 மணிக்கு தாவடி வடக்கு காந்தி கலை வளர்ச்சி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டவுள்ளார். (ஓ-4)

## ஆங்கிலப் பேச்சு

(வடமராட்சி)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய தரம் 11 மாணவர்கள் பங்குபெறும் முன் ஆயத் தமில்லா ஆங்கிலப் பேச்சு என்ற நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் .இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-10)

## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சிநெறி

நல்லூர் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையம் விதாதா செயற்திட்டத்தின் கீழ் காகிதக்கூழ் மூலம் சிலைகள் வடிவமைத்தல் தொடர்பான தொழில்நுட்ப மாற்றீட்டுப்பயிற்சி நெறி ஒன்றை நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் தலைமையில் ஆரம்பிக்கவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ். ரவீந்திர சர்மாவும் சிறப்பு விருந்தினராக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி க.நாகராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-6)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா கற்கைநெறி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஈராண்டு பகுதிநேர 2007/2009, முழுநேர 2007/2008 பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மே மாதம் 6, 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரங்கள் வருமாறு,.

**பகுதிநேரம் 2007/2009**

திருமதி எம்.அகல்யா, செல்வி ஏ. அங்கயற்கண்ணி, திருமதி கே.அனுஷியா, எஸ்.அரவிந்தன், செல்வி கே.பகீரதிதேவி, திருமதி எஸ்.பாமிளா, திருமதி பி.மதிவதனி, செல்வி கே.பிருந்தா , கே.சந்திரமௌலிசன், திருமதி பி.தேவகி, ஏ.எட்வின் சுமந்திரன், கே.கஜீந்திரன், திருமதி எஸ்.கீதாஞ்சலி, எஸ். ஞானச்செல்வன், எஸ்.ஞானமுரளி, கே.ஞானராஜா, திருமதி ஜெ.ஞானாசனி, செல்வி என். இன்பமலர், கே.யதீஸன், திருமதி கே.ஜெகதீஸ்வரி, திருமதி ஜி.ஜெயபாரதி, செல்வி ரி. ஜெயபாரதி, எஸ்.ஜெயச்சந்திரன்.

திருமதி பி.கஜலக்ஷ்மி, திருமதி எஸ். கஜேந்தினி, திருமதி என்.கமலினி, செல்வி சி.கவிதா, திருமதி பி.கவிதா, திருமதி எல். கவிதா, எஸ்.கேசவன், செல்வி எஸ்.கிருஷ்ண வதனி, கே.கிருபாகரன், திருமதி எஸ்.கோசலாஜினி, என்.கிருஷ்ண குமார், ரி.கிருஷ்ணதாஸ், எல்.குமணன், ரி.மகேஸ்வரன், திருமதி ஜெ. மலர்விழி, திருமதி வி.மாலினி, செல்வி எஸ்.மஞ்சுளா, செல்வி எஸ். மனோஜா, செல்வி ரி.மதியரசி, செல்வி எஸ்.மீனா, ரி.மோகன், எஸ்.முகுந்தன், ரி.முரளிதரன், திருமதி ஆர்.நாகரோகினி, திருமதி கே.நளிந்தினி, எஸ்.நந்தகுமார், என். நரேந்திரா, திருமதி பி.நருமதா, திருமதி ரி.நிசாந்தினி, எம்.பரமேஸ்வரன்.

பி.பரணீதரன், செல்வி எஸ்.பரிமளா, திருமதி கே.பத்மராணி, செல்வி பி. பிருந்தா, திருமதி எஸ். பூரணி, செல்வி எஸ்.பிறேமளா, செல்வி கே.பிரியதர்சினி, திருமதி எஸ்.ராகினி.

திருமதி என்.ராஜலெட்சுமி, பி.ராஜேஸ்வரன், ஆர்.ராஜ்கரன், திருமதி எஸ்.ரஜினி, என்.ரமணன், என்.ராமதாஸ், வை.ரமேஷ், திருமதி பி.வேணுகா, திருமதி பி.ருத்திராதேவி, செல்வி எஸ்.சகுந்தலா, திருமதி பி.சகிலா, செல்வி கே.சஞ்சீவனி, செல்வி எஸ்.சரவாஜினி, செல்வி ஏ.சர்வாஜினி, செல்வி எஸ்.சசிகலா, திருமதி எஸ்.ஜெயந்தினி, என்.செல்வேந்திரா, கே.சேதுலிங்கம், ஆர்.சாந்தகுமார், செல்வி பி.சாந்தநாயகி, திருமதி எஸ்.சாந்தி, செல்வி பி.சர்மிளா, திருமதி வி.சித்திரகலா, திருமதி ரி.சிவாஜினி, செல்வி எஸ்.சிவகாந்தி, ரி.சிவகுமார், எம்.சிவலிங்கம்.

வி.சிவநந்தநாதன், திருமதி வி.சிவானுயா, எஸ்.சிவராஜன், செல்வி எஸ்.சிவரஞ்சினி, திருமதி எம்.சிவசாந்தினி, ரி.ஸ்ரீகதரன், எஸ். ஸ்ரீதரன், ஏ.சுபகரன், செல்வி பி.சுபந்தினி, திருமதி எஸ். சுகந்தினி, திருமதி பி.சுகந்தினி, செல்வி கே.சுலோஜினி, திருமதி ஆர்.சுனிதா.

திருமதி எஸ்.சுதாஜினி, ஆர்.சுதர்சன், திருமதி பி.சுதர்சினி, ரி.தனேஸ்வரன், கே.தர்மஜீலன், செல்வி எஸ்.தர்சினி , பி.தயாளன், செல்வி வி.தயாளினி, செல்வி எஸ்.திகழ்ஜோதி, திருமதி ஏ.தினேஷா, திருமதி கே. திரிவேணிதிரிலோசினி, திருமதி ரி.திருவேணி,

செல்வி ரி.துஷ்யா, ஆர். துஷியந்தன், கே.துஷியந்தன், செல்வி எஸ்.உருத்திரபிரியா, செல்வி ஏ.வனிதா, கே.வசந்தமாறன், திருமதி எஸ்.வாசுகி, செல்வி.கே.வாசுகி, ஏ.வசந்தவத்சலன், திருமதி பி.விஜிதா, ஆர்.வின்சன்ற். செல்வி என்.யசோதா

**முழுநேரம் 2007/2008**

பி.தயாபரன், திருமதி கே. மார்லின் சுஜீபா, திருமதி ரி.தக்சாயினி, எஸ்.பொன் திவாகரன், ஜெ.ரஞ்சித்காந், திருமதி ஆர்.வாசுகி, என்.வாகீசன். (ஓ-7)

## உடற் பயிற்சி போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட உடற்பயிற்சி போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறாது எனவும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் .வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார். (ஓ-4-19)


## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி


### க.பொ.த. உயர்தர (2008) "3A", "2AB" சித்தி பெற்ற யாழ் வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு

| | | |
|---|---|---|
| இடம் | : | யாழ்.செயலக மாநாட்டு மண்டபம் |
| காலம் | : | 26.04.2009 |
| நேரம் | : | காலை 8.30 மணி |
| தலைமை | : | திரு ந.சிவரட்ணம் (உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி–வட பிராந்தியம்) |
| வரவேற்புரை | : | திரு.இ.ஐயேந்திரா (செயற்பாட்டு முகாமையாளர்) |
| ஆசியுரை | : | திரு.கே. கணேஷ் (அரசாங்கஅதிபர் –யாழ்ப்பாணம்) |
| சிறப்புரை | : | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்) |
| கருத்துரை | : | திரு வி.ரி.செல்வரட்ணம் (மேலதிக பிராந்திய கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வித் திணைக்களம்) |
| | | திருமதி அ.வேதநாயகம் (யாழ்.கல்விப்பணிப்பாளர்) |
| | | திரு.சி.வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர் –வலம்புரி) |
| | | திரு.என்.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் –வலம்புரி) |
| | | திரு.கே. பாலசுப்பிரமணியம் (முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) |
| விரிவுரை நிகழ்ச்சி | : | "Career Development" திரு.எம்.சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) |
| | | சான்றிதழ் மற்றும் அடையாளப் பரிசு வழங்கல் |
| நன்றியுரை | | |

• கௌரவிக்கப்படும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களுடன் சீருடையில் சமுகம் தருவது சிறப்பானது.


# பொதுமக்கள் உயிரிழப்பு குறித்த புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



(கொழும்பு)

வன்னி யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களின் புள்ளி விபரங்களை அம்பலப்படுத்துமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை மூன்று மாத காலத்திற்குள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் இடைத்தங்கல் முகாம்களில் பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து நேரில் பார்வையிட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்ற குழுவிற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு பல்வேறு வெற்றிகளை ஈட்டிக் கொடுத்த அரசாங்கப் படையினருக்கு ஐக்கிய தேசியக் கட்சி பாராட்டு தெரிவிப்பதாக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலங்கையில் இருந்து மேலும் அகதிகள் வருவர் என எதிர்பார்க்கின்றோம்

## அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர்

(கொழும்பு)


இலங்கையில் இருந்து மேலும் அகதிகள் வருவர் என தாம் எதிர்பார்ப்பதாக அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பொப் டேபஸ் தெரிவித்துள்ளார்.

படகு ஒன்றின் மூலம் சுமார் 32 இலங்கையர்கள் கடந்த புதன்கிழமை மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு வந்தமையை அடுத்தே இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 7ஆவது தடவையாக இவ்வாறான அகதிகள் அவுஸ்திரேலியாவுக்குள் படகு மூலம் பிரவேசித்துள்ளதாகவும் இலங்கையில் மோதல்கள் தீவிரமடைந்துள்ளமையை அடுத்து தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

திரை விமர்சனம்

# நாள் நட்சத்திரம்



விரும்பிய பெண் கிடைத்தால் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடும் ஆசாமிகளும் நல்ல குடும்பஸ்தன் ஆவான் எனும் கருத்தைச் சொல்லி வெளிவந்திருக்கும் படம்தான் நாள் நட்சத்திரம்!

கதைப்படி ஐந்தாறு பேர் கொண்ட அடாவடி கும்பலின் தலைவன் புதுமுகம் சஞ்ஜெய்க்கு அந்த ஊர்ப் பெரியவர் மகள் கிருஷ்ணஸ்ரீ மீது காதல். ஆனால் கலெக்டராகும் இலட்சியத்துடன் உள்ளூர் பள்ளியில் படிக்கும் கிருஷ்ணஸ்ரீக்கு சஞ்ஜெய் என்றாலே கசக்கிறது. விடுவாரா சஞ்ஜெய்? பெண் வேஷம் போடுகிறார். உச்சக் கட்டமாக கோயிலில் கண்ணை மூடி சாமி கும்பிடும் கதாநாயகி கிருஷ்ணஸ்ரீ கழுத்தில் அவசரத் தாலி கட்டி அவரை மனைவியாக அடைகிறார். அதன்பிறகு ஊர் ஒதுக்கி வைக்கிறது.ஹீரோ சஞ்ஜெய்யை மட்டுமல்ல... உடந்தையாக இருந்ததாகச் சொல்லி ஹீரோயின் கிருஷ்ணஸ்ரீயையும் தான். இருவரும் திருமணம் ஆனாலும் இருமனமாக சென்னைக்கு கிளம்பி வந்து என்ன செய்தார்கள்? எப்படி இணைந்தார்கள் என்பதே மீதிக்கதை!

ஹீரோவாக புதுமுகம் சஞ்ஜெய் எஸ். ஹீரோயின் கிருஷ்ணஸ்ரீயும் ஹீரோவிற்கு ஏற்ற தேர்வு! இந்த இருவரின் குறைகளையும் மனோரமா, டெல்லிகணேஷ், கொட்டாச்சி, குள்ளமணி உள்ளிட்ட மற்ற நட்சத்திரங்கள் நன்றாக நடித்து நிறை செய்திருப்பது ஆறுதல்!கே.ஜி.மாதவனின் ஒளிப்பதிவு ஓ.கே.! ராஜ்பவனின் இசையில் மல்லி மல்லி, கலக்கு கலக்கு.... உள்ளிட்ட பாடல்கள் படத்திற்குப் பலம்.

கிராமத்து காதலை கிராமிய மணம் கமழ நாள் நட்சத்திரம் படம் மூலம் சொல்ல முயற்சித்து நல்ல நட்சத்திரங்களை தேர்வுசெய்யாமல் கோட்டை விட்டிருக்கிறார் இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம் எனப் பல பொறுப்புகளை ஏற்றிருக்கும் புதியவர் சக்தி சி.என்.ஆர்.



# மீண்டும் வருகிறார் ஸ்ரீதேவி



ஹொலிவூட்டில் ஆட்டம் போட்டு விட்டு, பொலிவுட் பக்கம் போய் இந்தித் திரைப்பட ரசிகர்களின் மனதை கொள்ளையடித்தவர் நடிகை ஸ்ரீதேவி. 10 ஆண்டுகளுக்கு முன்பு நடிப்பை கைவிட்ட ஸ்ரீதேவி இப்போது மீண்டும் நடிக்கப் போகிறாராம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூர் தயாரித்த மிஸ்டர் இண்டியா படம் பாதியிலேயே நின்றுபோனது. அந்தப் படத்தை மீண்டும் தயாரிக்க போனிகபூர் முடிவு செய்திருக் கிறார். ஏற்கனவே எடுத்திருக்கும் இந்தப் படத்தின் காட்சிகளில் நடித்த ஸ்ரீதேவி மிகவும் ஒல்லியாக இருந்தார். ஆனால் தற்போது அவர் குண்டாக இருப்பதால் உடலைக் குறைக்கும் பயிற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறாராம். மும்பையில் உள்ள ஒரு புகழ்பெற்ற ஜிம்முக்கு தினமும் வந்து போகும் ஸ்ரீதேவியை காண ஏராளமான ரசிகர்கள் ஜிம் முன் திரண்டு விடுகிறார்களாம். இதனால் கண்டிப்பாக மிஸ்டர் இண்டியா படம் ஓடும் என்ற நம்பிக்கையில் இருக் கிறார் போனிகபூர்.

# கிருஷ்ணா -விஜயலட்சுமி ஜோடியின் கற்றது களவு

டாக்கிங் டைம்ஸ் மூவிஸ் பிரைவேட் லிமிட்டெட் எனும் புதிய பட நிறுவனம் சார்பில் பட்டியல் சேகர் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கும் புதிய படம் கற்றது களவு. அலிபாபா படத்தின் நாயகன் கிருஷ்ணா ஹீரோவாக நடிக்கும் இரண்டாவது படம் இது.கதாநாயகியாக விஜயலட்சுமி நடிக்கிறார்.



இவர்கள் தவிர வி.எம்.சி.ஹனீபா, சந்தானபாரதி, மனோபாலா,அபியும் நானும் குமாரவேல் உள்ளிட்டவர்கள் நடிக்கும் இப்படத்தை 100க்கும் மேற்பட்ட விளம்பரப் படங்களையும்,பல மியூசிக் அல்பங்களையும் இயக்கிய பாலாஜி டி. இயக்குகிறார். கிருஷ்ணா வங்கி அதிகாரியாக வும்,விஜயலட்சுமி விமான பணிப்பெண்ணாகவும் பணி புரியும் கற்றது களவு படத்தின் கதைக் கரு இருக்கும் இடத்தில் இருந்து வேகமாக வாழ்க்கையில் முன்னேறும் ஒருவனைப் பற்றியது என்கிறார் டைரக்டர் பாலாஜி. படத்திற்கு ஒளிப்பதிவு செய்பவர் நீரவ்ஷா.

இசை பேரல் ஜேக்கப்.

# விஜய் ஜோடியானது மகிழ்ச்சி- அனுஷ்கா

'ரெண்டு' படத்தில் மாதவன் ஜோடியாக தமிழில் அறிமுகமானவர் அனுஷ்கா. பின்னர் தெலுங்கில் பிசியான நடிகையாக உயர்ந்தார். அவர் கடைசியாக நடித்து ரிலீசான 'அருந்ததீ' படம் ஆந்திராவில் முன்னணி நடிகர்கள் படங்களை பின்னுக்கு தள்ளி பல கோடி ரூபாய் வசூலை வாரி குவித்துள்ளது. அப்படம் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.



இதன்மூலம் அனுஷ்கா மீண்டும் தமிழில் ஒரு ''ரவுண்ட்'' வருகிறார். விஜய் ஜோடியாக''வேட்டைக்காரன்'' படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். மேலும் பட வாய்ப்புகள் குவிகிறது.

விஜய் ஜோடியானது பற்றி அனுஷ்கா கூறுகையில், விஜய் சிறந்த நடிகர். நன்றாக நடனம் ஆடக்கூடியவர். அவருடன் ஜோடி சேர்ந்தது மகிழ்ச்சி அளிக்கிறது.ஏற்கனவே ''ரெண்டு படம் மூலம் தமிழ் ரசிகர்களிடம் அறிமுகமானேன். அருந்ததீ படம் இன்னும் பிரபலப்படுத்தி இருக்கிறது.

இந்தப் படம் தாய்மார்களையும், குழந்தைகளையும், என் பக்கம் திருப்பி இருக்கிறது. வேட்டைக்காரன் படம் மூலம் இளைஞர்களையும் கவர்வேன் என்றார்.

# நடிகரானார் இளையராஜா



திரைக்குப் பின்னால் சாதனை படைத்து வந்த இளையராஜா முதல் முறையாக திரையில் தோன்றி நடித்திருக்கிறார்.

இந்த சாதனையை செய்திருப்பவர் அழகர் மலை இயக்குனர் எஸ்.பி.ராஜ்குமார். ஆர்கே, பானு நடிக்கும் அழகர்மலை படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார். படத்தை தயாரிப்பவர் ராஜாவின் நண்பர் சங்கிலி முருகன். காதலுக்கு மரியாதக்குப் பிறகு இவர் தயாரிக்கும் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படத்தில் இடம்பெறும் உலகம் இப்போ என்ற பாடலை பாடியதுடன் ராஜாவே இதில் நடித்துமிருக்கிறார். ராஜா பிறந்து, வளர்ந்த இடங்களில் இந்தப் பாடல் படமாக்கப்பட்டுள்ளது. முக்கியமாக ராஜாவுக்குப் பிடித்தமான திருவண்ணாமலை ரமணர் ஆச்சிரமத்திலும் பாடலை எடுத்திருக்கிறார்கள்.

# ஆங்கிலத்தில் உருவாகிறது ரோஜா




பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவனம் ரோஜா படத்தை ஆங்கிலத்தில் மொழி மாற்றம்செய்து வெளியிடவிருக்கிறது. மணிரத்னம் இயக்கத்தில் 1992 ஆம் ஆண்டு வெளியாகி சூப்பர் ஹிட் ஆன படம் ரோஜா.அரவிந்த் சாமி, மதுமிதா நடித்த இப்படத்திற்கு இசையமைத்ததன் மூலம் இசையுலகில் காலடி எடுத்து வைத்தார் ஏ.ஆர்.ரஹ்மான். படத்தில் இடம்பெற்ற அத்தனை பாடல்களும் ஹிட் ஆனது. ஏ.ஆர். ரஹ்மானுக்கு முதல் படத்திலேயே தேசிய விருது கிடைத்தது. தற்போது இப் படத்தை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து வெளியிடும் பணிகளில் கவிதாலயா நிறுவனம் இறங்கியிருக்கிறது. விரைவில் இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வரும்.

# கமலுடன் மீண்டும் அசின்

பரத் பாலாவும், வால்ட்டிஸ்னியும் இணைந்து உருவாக்கும் புதிய படம் 19 ஸ்டெப்ஸ். இப் படத்தில் கமல்ஹாசன், அசின் மற்றும் ஜப்பானிய ஹீரோ டடோனபு அசனோ ஆகியோர் நடிக்கவுள்ளனர்.



இதில் கராத்தே மாஸ்டராக கமல்ஹாசன் வருகிறார். எம்.டி வாசுதேவன் நாயரின் கதையில் உருவாகும் இப்படத்திற்கு ஏ.ஆர் ரஹ்மான் இசையமைக்கிறார். ஒரே நேரத்தில் தமிழ், ஆங்கிலம் மற்றும் ஜப்பானிய மொழிகளில் இப்படம் உருவாகிறது.

இப்படத்தில் தற்போது பசுபதியும் பிருத்விராஜும் இணைந்துள்ளனர். பசுபதி கமலுடன் இணைவது இது 3 ஆவது முறையாகும்.

கமல்ஹாசனின் விருமாண்டி பசுபதிக்கு பெரிய பிரேக்காக அமைந்தது. இதையடுத்து மும்பை எக்ஸ்பிரஸ் படத்திலும் நடித்தார். தற்போது 3 ஆவது முறையாக கமலுடன் இணைகிறார்.

# இலங்கை வங்கியும் வலம்புரி[illegible]
# கௌரவிப்பு விழா -[illegible]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பி.நிரோஷன் கணிதம்– 3A
எஸ்.யாதவன் கணிதம்–3A
ஏ.அல்பேட் நிமலன் உயிரியல் –3A
ஜி.யதுர்ஷன் கணிதம்–3A
கே.கரிகாலன் கணிதம்–3A
எம்.பார்த்தீபன் கணிதம்–2A,B
எஸ்.ரகுராஜ் உயிரியல்-3A
என். மனோஜ் கணிதம்–3A
ரி.ஜெயக்கிருஷ்ணன் கணிதம்– 2A,B
எஸ்.மோகனராஜ் கணிதம்– 2A,B
கே.சுபாஷ்கர் கணிதம்–3A
ஜே.திபாகர் கணிதம்– 2A,B
பி.ராஜ்குமார் கணிதம்2A,B
எஸ்.விசாகன் உயிரியல்-3A
கே.யாதவராஜ் கணிதம்2A,B
எஸ்.நிரஞ்சனன் கணிதம்2A,B
கே.ஜெயமோகன் கணிதம்– 2A,B
யு.தமோனுதன் வர்த்தகம்– 3A
வி.பத்மநாபா கலை– 2A,B
வி.பிரகாஷ் கலை– 2A,B
[illegible] உயிரியல்-3A
ரி.வினோபன் உயிரியல்-2A, B
எஸ்.செந்தில்குமரன்– கணிதம்– 2A,B
ஏ.கரீந்திரன்– உயிரியல்– 3A

எஸ்.விக்னன்–உயிரியல்-2A,B
எ.கிருத்திகன்–உயிரியல்-2A,B
வி.ஜெய்ராஜ்– உயிரியல்-2A,B
எம்.பிருந்தாபன்–கணிதம்– 2A,B
என்.கௌசிகன் –உயிரியல்-2A,B
எல்.சுஜீபன் –கணிதம்– 2A,B
வி.சிவமைந்தன்– உயிரியல்-2A,B
எஸ்.நிஷாந்தன்–உயிரியல்-2A,B
ரி.பிரதீபன்–கலை– 2A,B
ஜி.ஜனார்த்தனன் –கலை– 2A,B
எஸ்.விஸ்ணுராஜ்–கலை– 2A,B

## கொக்குவில் இந்துக் கல்லூரி

எஸ்.சாலவன் கணிதம்–3A
கே.தர்மேஸ்வரன் கணிதம்–2A,B
வி.வர்ஷிகன் கணிதம்–2A,B
என்.சிவாஸ்கர் கணிதம்–2A,B
எஸ்.சிவதர்சன் வர்த்தகம்–3A
பி.ஜனனி வர்த்தகம்–2A,B
எஸ்.லதர்சன் வர்த்தகம்–2A,B

## சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை

எஸ்.சுமலதா கலை–3A
ஜே.நிருஷா கலை–3A
ஏ.அருள்சீலி – கலை–2A,B

## செங்குந்தா இந்துக் கல்லூரி

பு.ரசிதா கலை–3A
எஸ்.சுதர்ஷனா கலை–3A

## வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

பி.ஜனனி உயிரியல்-2A,B
எஸ்.தேவகி கணிதம்–2A,B
ஜி.குயிந்தினி கலை–3A
கே.நிரோஷி உயிரியல்2A,B
வி.காருண்ஜா உயிரியல்2A,B
என்.கஜனி உயிரியல்-2A,B
ஆர்.மேனுகா வர்த்தகம்–3A
கே.கமலாஜினி கலை–3A
கே.திவ்வியவர்த்தனி கலை–2A,B
எஸ்.தவரூபிகா கலை -2A,B
ஜே.சாளினி கலை–3A
ரி.அர்ச்சுதா வர்த்தகம்–3A
எஸ்.யாழினி கலை–3A
கே.பானதி வர்த்தகம்–3A
கே.ராஜி வர்த்தகம்–2A,B
ஜே.மலர்மதி வர்த்தகம்–2A,B
கே.கேமாலினி கலை–2A,B
ஜி.மானிகா கலை–2A,B
கே.துஷிதா கலை–3A
எஸ்.கபிலா கலை–2A,B
வி.சுவேதா கலை–2A,B
ஆர்.பிரியதர்ஷினி கலை–3A
எஸ்.கார்த்திகா கலை–2A,B
பி.நிரோஜினி வர்த்தகம்–2A,B
ரி.புவனா கலை–2A,B
கே.சிவை கலை–3A
வி.மதிவதனி கலை–2A,B
வி.நவவித்தியா கலை–2A,B
கே.தயாநிதி கலை–2A,B
கே.பிரியதர்ஷினி கலை3A
எம்.தர்ஷிகா கலை–2A,B
எஸ்.டிலக்ஷா கலை–2A,B
பி.சர்மிளா கலை–2A,B
சு.யோசிகா கலை–2A,B

## யாழ்.மத்திய கல்லூரி

கே.மிதுலன் வர்த்தகம் 3A
பி.ஜேம்ஸ்ராஜ் கணிதம் 2A,B
சி.கோபிநாத் கலை–3A
ஸ்செல்வசுஜந்தன் கலை -2A,B
ஜே.பானுஜன் வர்த்தகம்–2A,B
பி.அகல்யன் வர்த்தகம்–2A,B
ஐ.தயாபரன் கலை–2A,B
கே.செல்றன் கலை–2A,B
எம்.பத்மரூபன் கலை–2A,B
கே.கீர்த்தனன்–கலை 2A,B
வி.கஜேந்திரகுமார் கலை2A,B

## திருக்குடும்ப கன்னியர்மட[illegible]

வை.பபிதா வர்த்தகம்2A,B
ஏ.ஜெயதர்சினி கலை–3A
எல்.யூட்நிரோஜா கலை 3A
ஈ.நிரோசியா கலை–3A
ரி.அனுஜிக்கா கலை -2A,B
ஏ.டானியா டுக்ஷி கலை 3A
எஸ்.ரெஜிவேர்னியா கலை–2A,B
கே.மேரிஜெயபாலினி கலை–2A,B
எஸ்.ஜான்சி கலை–2A,B
என்.சௌமியா கலை– 2A,B
கே.தண்சிகா – கலை 2A,B

## அத்தியார் இந்துக் கல்லூரி

பி.மேரி பவித்திரா கலை–2A,B

## அச்சுவேலி மத்திய கல்லூரி

சி.மேரிதர்மினி கலை –3A

## சென்.[illegible]

வி.கௌதமன் கலை 3A
கே.கிரு[illegible] கணித[illegible]
கே.சுஜந்தன் வர்த்தகம்–3A
எம்.நோவாபிரத[illegible] வர்த்தகம்–3A

# பெண்கள் நடத்தும் உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டு முடிந்த உதவிகளைச் செய்யவேண்டும்

## ஜெயலலிதா கோரிக்கை



(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி சென்னையில் பெண்கள் நடத்தி வரும் உண்ணாவிரத போராட்டத்தை கைவிடவேண்டும் என்று ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

''இலங்கை இராணுவத்திற்கு உதவிய மத்திய மாநில அரசுகளை கண்டித்தும் இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையை கண்டித்தும், இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் பெண்கள் அமைப்பினர் பேராசிரியர் சரஸ்வதி தலைமையில் 20 பெண்கள் கடந்த 12 நாட்களாக சென்னையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில் 22 ஆம் திகதி பொலிஸார் பெண்கள் அமைப்பினர் உண்ணா விரதம் இருக்கும் இடத்திற்குள் அத்துமீறி நுழைந்து கடுமையாக நடந்து கொண்டதை அறிந்து நான் மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

பெண்களே முன் நின்று நடத்தும் இந்த உணர்வு போராட்டத்தின் வலியை, பெண்ணாகிய நானும் உணர்வேன். என் அன்புச் சகோதரர் மணி உட்பட ஈழத்தமிழர்களுக்காக தங்கள் இன்னுயிரை 14 தமிழர்கள் மாய்த்துக் கொண்டும், கருணாநிதி போர் நிறுத்தத்திற்கு தேவையான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கைத் தமிழர்களுக்காக உடலை வருத்திக் கொண்டு உண்ணாவிரதம் இருப்பதை தவிர்த்து, பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு நம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும். இதுதான் இப்போதைய முக்கியத்தேவை.

எனவே, உண்ணாவிரதம் இருந்து வரும் பெண்கள் அனைவரும் தங்களுடைய உண்ணாவிரத அறப்போராட்டத்தை உடனடியாக முடித்துக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா கூறிய அறிக்கை, உண்ணாவிரதம் இருந்த பெண்களிடம் கையளிக்கப்பட்டது.

இதை பெற்றுக் கொண்ட உண்ணாவிர குழுவினர் இன்று நிர்வாகிகளுடன் பேசி உண்ணாவிரதத்தை கைவிடுவது பற்றி ஆலோசிப்பதாக தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் தாயகத்தில் உண்ணாவிரதம் இருந்து வரும் பெண்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தாயகத்திற்கு எதிரே உள்ள சாலையில் நீண்ட வரிசையில் நின்று கொண்டு கறுப்பு கொடி ஏந்தி மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் சோனியா காந்தியே போரை நிறுத்து, தமிழர்களே ஒன்று சேர் என்று கோஷங்கள் எழுப்பினர். (ஓ-6)


## இலங்கை தேசியக்கொடியை எரித்தவர்கள் கைது

(ஈரோடு)

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் எனக் கூறி தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை சேர்ந்தவர்கள் கொடியெரிப்பு போராட்டம் நடைபெறும் என துண்டு பிரசுரங்கள் விநியோகித்துள்ளனர்.

இதன்படி நேற்று காலை ஈரோடுகாளை மாட்டு சிலை முன்னர் கூடிய தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் மோகன்ராஜ், உறுப்பினர்கள் கண்ணன், ரவி, மாதேஷ் ஆகியோர் இலங்கை மற்றும் இந்திய கொடிகளை எரித்தனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து ஈரோடு ட்வுன் பொலீசார் 4 போரையும் கைது செய்துள்ளனர். (ஓ-6)




## நியூயோர்க் திரைப்பட விழாவில் தமிழ் படத்துக்கு விருது

(புது டில்லி)

தமிழில் வெளியான முதல் முதல் முதல் வரை படம் நியூர்யோர்க் சர்வதேச தனியார் திரைப்பட விழாவில் விருது பெற்றுள்ளது.

சென்னையைச் சேர்ந்த இயக்குநர் கிருஷ்ணன் சேஷாத்ரி கோமடத்தின் முதல் படம் இது. கதாநாயகனாக சத்யஜித், நாயகியாக சிந்துஜா ஆகியோர் நடித்துள்ளனர்.

சிறந்த கதை அமைப்புக்கான பிரிவில் இப்படத்துக்கு விருது கிடைத்துள்ளது. இத்திரைப்படத்தில் 100 புதுமுகங்கள் அறிமுகமானார்கள் என்பது தனிச்சிறப்பு.

சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் உயர் நடுத்தர வகுப்பு இளைஞர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது இப்படத்தின் கதை.

தமிழின் முதல் மெட்ரோ மூவி (பெருநகர் சார் திரைப்படம் )என்று பெருமையையும் இப்படம் பெற்றுள்ளது.

கோவாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவிலும் இப்படம் திரையிடப்பட்டது. (ஓ-6)

## இலங்கை நிலவரம் தொடர்பில் விரைவில் நல்ல முடிபு வரும்

### ப.சிதம்பரம் பேட்டி


(சென்னை)

வேண்டுகோள், கோரிக்கை என்பதை எல்லாம் தாண்டி, உடனே போரை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தி கூறியுள்ளது. நல்லதே நடக்கும், நல்ல முடிபு விரைவிலே வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று இந்திய உட் துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

இலங்கைக்கு இரு அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் இலங்கை நிலவரம் தொடர்பாக அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

இந்தியா இலங்கைக்கு அனுப்பிய இரண்டு தூதர்களும் இலங்கையிலே இலங்கை ஜனாதிபதி மற்ற அதிகாரிகளை சந்தித்துவிட்டு டில்லி திரும்பி இருக்கிறார்கள். டில்லி திரும்பிய அவர்கள் அதிகாரபூர்வமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். இந்திய அரசின் கவலை, தமிழக மக்களின் கவலையை எல்லாம் இலங்கை அரசிடம் அவர்கள் எடுத்து சொல்லி இருக்கிறார்கள்.

உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று அழுத்தம், திருத்தமாக வலியுறுத்தி இருக்கிறார்கள். வேண்டுகோள், கோரிக்கை என்பதை எல்லாம் தாண்டி இந்திய அரசு, இலங்கை அரசை வற்புறுத்தி உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று அவர்களுக்கு எடுத் துச் சொல்லி இருக்கிறது.



இலங்கை ஜனாதிபதி நம்முடைய தூதர்களின் கருத்துகளை எல்லாம் கவனமாக கேட்டார்என்று அதிகார பூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லதே நடக்கும் என்று நான் நம்புகிறேன். ஓரிரு நாட்கள் பொறுத் திருந்து என்ன நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஆனால், நல் லதே நடக்கும் என்று நம்புகிறேன். இந்திய தூதர்களோடு நான் தொலைபேசியில் பேசினேன்.

அந்த விவரங்களை எல்லாம் முதல மைச்சர் கருணாநிதியிடம் விவரமாக எடுத்துக் கூறினேன்.

அங்கு நடந்த பேச்சுவார்த்தை முடிவுகளை எல்லாம் முதலமைச்சரிடம் நான் எடுத்துச் சொல்லி, அந்தச் செய்திகளை அவரோடு நான் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். அவரும், நல்லதே நடக்கும் என்று நம்புவோம் என்று கூறியிருக்கிறார்.

நல்லதே நடக்கும், நல்ல முடிபு விரைவிலே வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இவ்வாறு ப.சிதம் பரம்கூறியுள்ளார். (ஓ-6)

## இலங்கையில் அப்பாவி மக்களின் துயர் துடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி கல்கத்தாவில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, இலங்கைப் பிரச்சினை குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு இலங்கையில் போர் நடப்பதால் அப்பாவி தமிழர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அவர்கள்பாதுகாக்கப்பட வேண்டும்என்பதில் இந்தியா அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. இதற்காக வெளியுறவுத் துறை செயலரும், தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் இலங்கை கு அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் அப்பாவி மக்களின் துயரம் துடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதுவே இலங்கைப் பிரச்சினை பொறுத்தவரை எனது நிலைப்பாடு என்று தெரிவித்தார். (ஓ-6)

## இலங்கையில் விரைவில் சுமூகச் சூழல் உருவாக்கப்பட வேண்டும்

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பிரகாஷ் கராத்

(டில்லி)

சண்டை நடக்கும் பகுதிகளிலிருந்து அப்பாவித் தமிழ்மக்கள் முழுவதுமாக வெளியேறும் வரை இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட வேண்டும். இதைச் செய்யும்படி இலங்கை அரசுக்கு மத்திய அரசு நெருடிக்கடி அளிக்க வேண்டும் என்று பிரகாஷ் கராத் வேண்டுகோள் விடுத்துள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பிரகாஷ் கராத்நேற்று முன் தினம் டில்லியில் நிருபர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

இலங்கை நிலவரங்கள் மிகவும் கவலையளிப்பதாக உள்ளன. தேசிய பாதுகாப்பு ஆலோசகரும், வெளியுறவுத்துறைச் செயலரும் இலங்கைக்குச் சென்றுள்ளனர். இலங்கையில் சண்டையை நிறுத்த வேண்டுமென இலங்கை அரசுக்கு அதிகபட்ச நெருக்கடியை இருவரும் தர வேண்டும் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்.

சண்டை நடக்கும் பகுதிகளில் இருக்கும் அப்பாவிப் பொதுமக்கள் அனைவரும் அந்தப் பகுதிகளிலிருந்து முழுவதுமாக வெளியேறும் வரை இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட வேண்டும். இதைத்தான் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலும் கூறியுள்ளது.

எனவே இராணுவ நடவடிக்கைகளை ஒத்திவைக்கும் படி இலங்கை அரசுக்கு மத்திய அரசு நெருக்கடி அளிக்க வேண்டும். புலிகள் அமைப்பும் ஆயுதங்களைக் கீழே போட முன்வர வேண்டும்.

இலங்கையில் விரைவில் சுமூகச் சூழல் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரகாஷ் கராத் கூறினார். (ஓ-6)

## இலங்கை பிரச்சினைக்காக தேர்தலை புறக்கணிக்க தயாரா?

### தி.மு.க - அ.தி.மு.கவுக்கு விஜயகாந்த் கேள்வி

(மேட்டூர்)

தமிழகத்தில் வேலை நிறுத்தம் நடத்தும் தி.மு.கவும் ஆதரவாக குரல் கொடுக்கும் அ.தி.மு. கவும் ஈழத்தமிழர் பிரச்சினைக்காக தேர்தலை புறக்கணிக்க தயாரா? என பிரசார கூட்டத்தில் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் சவால் விடுத்தார்.

தர்மபுரி நாடாளுமன்ற தொகுதி தே.மு.தி.க வேட்பாளரை ஆதரித்து மேச்சேரியில் விஜயகாந்த் பிரசாரம் செய்தார். அதில் அவர் பேசியதாவது,

ஊழல் செய்வதில் கருணாநிதி ,ஜெயலலிதா இருவரும் கில்லாடிகள். சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால், பாலைவனமாக இருக்கும் தமிழகம் சோலை வனமாகும் என கருணாநிதி கூறுகிறார். அப்படியென்றால் இதுவரை அவர்கள் நடத்திய ஆட்சியில் தமிழகம் பாலைவனமாக இருந்தது என்பதை அவர்களே ஒத்து கொள்கின்றனர்.

ஒரே கட்சியின் நிர்வாகிகள் வெவ்வேறு விதமான அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றுகின்றனர். மக்கள் உஷாராக இருக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் பிரச்சினைக்காக வேலை நிறுத்தம் நடத்தும் தி.மு.கவும், அ.தி.மு.க போன்ற பெரிய கட்சிகள் தமிழர்களுக்கு ஆதரவாக தேர்தலை புறக்கணிப்பதாக கூறினால் நாங்களும் உடனடியாக தேர்தலை புறக் கணிக்க தயாராக இருக்கிறோம். ஈழத்தமிழர் பிரச்சினைக்காக குரல் கொடுப்பதாக பேசும் கட்சிகள் எனது சவாலை ஏற்க தயாரா? என்றார். ஓ-6)




நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் கருணாலய சிறுவர் இல்ல மண்டபத்தில் நடைபெற்ற சமுர்த்தி "சிப்தொர" புலமைப் பரிசில் திட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வை நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் உரையாற்றுவதையும், நல்லூர்ப் பிரதேச செயலரினால் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## பிரித்தானியாவில் 18 ஆவது நாளாக தொடரும் பரமேஸ்வரனின் உண்ணாவிரத போராட்டம்



(லண்டன்)

இலங்கை அரசாங்கம் தொடர்ந்து நடாத்தும் தமிழ் இன அழிப்பை கண்டித்து பிரித்தானியா வாழ் தமிழ்மக்கள் நேற்று 19ஆவது நாளாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தை பிரித்தானிய நாடாளுமன்ற சதுக்கத்தில் முன்னெடுத்தனர். 18 ஆவது நாளாக தனது உண்ணாநிலைப் போராட்டத்தை தொடரும் பரமேஸ்வரனை பல இன மக்கள் பார்வையிட்டு செல்கின்றனர்.

அவர்களில் ஒருவர் தெரிவிக்கையில், உங்களுடைய போராட்டம் நிறைவேறும் வரை என்னுடைய ஆதரவு தொடரும். நான் எப்போதும் உங்களுடன் இருப்பேன் என்றார்.

இப்படி ஆறுதல் ஒரு வகையினர் சொல்ல மிதிவண்டியில் வேறொரு கவனயீர்ப்பு போராட்டத்தை நிகழ்த்திய வெளிநாட்டவர்கள் தமிழ்மக்களின் இந்தப் போராட்டத்தை ஆதரித்து அவர்கள் முன் சிறிய உரையாற்றியதோடு இலங்கை அரிசின் படுகொலையைக் கண்டிக்கும் சில பதாதைகளை தங்களுடைய மிதிவண்டியில் வைத்து சில துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு பரப்புரை செய்வதற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

பரமேஸ்வரன் அவர்களின் உண்ணா நிலை உன்னத தியாகமாக மதிக்கும் தமிழ் மக்கள் இன்றும் நீண்டவரிசையில் நின்று அவரை பார்வையிட்டுச் சென்றனர்.

இவரின் உண்ணாநிலையால் மிகவும் உணர்ச்சிய டைந்துள்ள ஒரு தாய் வீட்டு வேலைகளை தள்ளி வைத்துவிட்டு பரமேஸ்வரனை தினமும் பார்வையிட்டுச் செல்கின்றார்.

இலங்கையில் காணாமல் போகும் தமிழ் மக்களுக்கு ஒரு நீதி கிடைக்கவேண்டும் எனக் கோரி காணாமல் போவோர்க்கு எதிரான சர்வதேச செயற்குழு என்ற அமைப்பு இன்று ட்ராபல்கர் சதுக்கத்தில் 11 மணியிலிருந்து 12 மணிவரை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது. இதில் பல தமிழ் மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு ஐ.நா. நிவாரண உதவி

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் இடம்பெயர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உடனடியாக வழங்குவதற்குத் தேவையான 5 ஆயிரம் மெற்றிக்தொன் நிவாரணப் பொருட் கள் விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானி கராலயம் அறிவித்துள்ளது.

இந்தவார இறுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கான தற்காலிக கூடாரங்கள், உள்ளிட்ட 5 ஆயிரம் மெற்றிக்தொன் உடனடி அத்தியாவசியப் பொருட்கள் டுபாயிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், இந்த நிவாரணங்கள் வவுனியா, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் முகாம்களிலுள்ள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமெனவும் யு.என்.எச்.சீ.ஆர். தெரிவித்துள்ளது.

எதிர்பார்த்ததைவிட அதிகமான மக்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்திருப்பதால் அவர்களுக்கான நிவாரணங்களையும், உடனடித் தேவைகளையும் நிறைவேற்றுவதில் அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவில் தங்கவைப்பதற்குப் போதியளவு இடவசதிகளைச் செய்துகொடுப்பதிலும், அவர்களுக்கான குடிநீர் மற்றும் நீர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் உணவின்றி பட்டினி யில் இருப்பதுடன் அவர்களுக்கு வழங்கு வதற்குப் போதுமான உணவுப் பொருட்கள் உரிய தரப்பினரிடம் இல்லையென அரச சார்பற்ற வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு வலயத்தில் 60 ஆயிரம் முதல் 70 ஆயிரம் பேர் வரையான பொதுமக்களே இருப்பதாக அரசாங்கம் முன்னர் கூறிவந்த நிலையில் எதிர்பாராத விதமாக அங்கிருந்து ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறியிருந்தனர்.

இன்னமும் அங்கு 25 ஆயிரம் பேரே எஞ்சியிருப்பதாக அரசாங்கம் கூறிவருகிறது. எனினும், அங்கிருக்கும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

## காயமடைந்தோர், நோயாளர்களால் நிரம்பி வழியும் வவுனியா வைத்தியசாலை

(கொழும்பு)

வன்னியிலிருந்து வருகின்ற போர்க் காயக்காரர்கள் மற்றும் நோயாளர்களினால் நிறைந்து வழிகின்ற வவுனியா பொது வைத்தியசாலை, வைத்தியர், தாதியர் பற்றாக் குறைக்கு மத்தியிலும் இரவு பகலாக வைத்திய சேவையாற்றி வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் 448 கட்டில்கள் மட்டுமே இருக்கின்றன. எனினும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றார்கள். காயக்காரர்கள், நோயாளர்கள் என நாளாந்தம் இங்கு 400 பேர் வரையில் கடந்த சில தினங்களாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாகவும், இதேபோன்று கணிசமான எண்ணிக்கையானவர்கள் சிகிச்சையின் பின்னர் இடைத்தங்கல் நிவாரண நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையின் 9 ஆம், 10 ஆம் விடுதிகளில் 400 க்கும் மேற்பட்ட நோயாளர்களும், 7 ஆம், 8 ஆம் வார்டுகளில் 200க்கும் மேற்பட்ட நோயாளர்களும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்ற போதிலும், இவற்றைக் கவனிப்பதற்கு 2 வைத்தியர்கள் மாத்திரமே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் உள்ள சத்திர சிகிச்சை நிலையத்தில் நாளாந்தம் இரவு ஒரு மணி, இரண்டு மணிவரையில் வைத்தியர்களினால் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் எம்.எஸ்.எவ். எனப்படும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வைத்திய தொண்டு நிறுவன வைத்திய நிபுணர்களும், சுழற்சி முறையில் நாட்டின் தென் பகுதியில் இருந்து வருகின்ற வைத்தியர்களும் மேலதிகமாக இங்கு பணிபுரிகின்றார்கள்.

அத்துடன் ஐ.சி.ஆர்சியின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களும் வவுனியா, மட்டக்களப்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர ஆகிய தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் மாணவர் குழுக்களும் இங்கு பணியாற்றும் குறைந்த எண்ணிக்கையிலான தாதியர்களுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா வைத்தியசாலையில் நிலவுகின்ற இடநெருக்கடி காரணமாக விடுதிகளின் விறாந்தைகள் , நடைபாதைகளிலும் நோயாளர்கள் படுத்திருந்து சிகிச்சை பெற நேர்ந்துள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு மேலதிக கட்டில்கள், ஸ்ரெச்சர்கள், சக்கர நாற்காலிகள் உட்பட பல முக்கியமான உபகரணங்கள் அவசரமாகத் தேவைப்படுவதாக அதிகாரிகள் சுகாதார அமைச்சு மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோரது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் நிலவுகின்ற வைத்தியர் மற்றும் தாதியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## கொழும்பில் சிகிச்சை பெற்ற வேளையில் காணாமல் போன இளைஞன் விடுவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக சத்திர சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டு கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்து சத்திர சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் காணாமல் போன இளைஞர் ஜாஎல பகுதியில் பலத்த தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் ஒன்பது நாட்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் ஜனாதிபதியின் ஆணைக் குழு உறுப்பினரும், பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடம் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி நெல்லியடியையுச் சேர்ந்த 28 வயதான முருகதாஸ் பிரசாத் என்ற இளைஞரே இவ்வாறு கடத்தி விடுவிக்கப்பட்டவராவார். சத்திர சிகிச்சைக்காக கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ். நகரிலிருந்து அழைத்து வரப்பட்ட இவர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நிலையில் கடந்த 11 ஆம் திகதி ஆஸ்பத்திரி ஊழியரான புஞ்சி பண்டார என்பவரால் வெளியில் அழைத்து செல்லப்பட்டபோது வாசலிலிருந்த வெள்ளை வானிலிருந்தவர்கள் இவரைக் கடத்திச் சென்ற விபரம் மருதானைப் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் புகார் செய்யப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் செய்யப்பட்ட புகாரை அடுத்து அவர் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு இவ் விடயத்தைக் கொண்டு வந்தார்.

இந்தநிலையில் 11 நாட்களுக்குப் பின்னர் பிரசாத் கண்கள் கட்டப்பட்ட நிலையில் தாக்குதலுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் ஜாஎலையில் விடுவிக்கப்பட்டதையடுத்து அவருக்கு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை வவுனியா கட்டைக்குளத்தைச் சேர்ந்த 27 வயதான ஜோதிநாயகம் ஜேசுதாசன் குறுமணல் காட்டில் வைத்து வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போயிருப்பதாக சகோதரரான ஜோதிநாயகம் ஞானப்பிரகாசம் பிரதி அமைச்சரிடம் புகார் செய்துள்ளார்.

அத்துடன் தோட்டவெளி எருக்கலம்பிட்டி மன்னாரைச் சேர்ந்த கடல் தொழிலாளர்களான சார்லஸ் றொகான்ராஜ் (25), மெகனட் தர்ஷன் (25) என்ற இளைஞர்களும் காணாமல் போயுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்திலும், பிரதி அமைச்சரிடமும் எம். சார்ல்ஸ் ஜோசப் புகார் செய்துள்ளார். காணாமல் போனவர்கள் தொடர்பாக பிரதி அமைச்சர் பொலிஸ்மா அதிபரிடம் புகார் செய்துள்ளார். (ஓ-6)

# ...ரியும் இணைந்து நடத்தும்

# -26.04.2009

## ...மடம் ம.வித்தி



ஜெ.டில்றுக்ஷி
கலை3A



அமல்காயத்தி அனோஜா
கலை -3A

## கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்



ஆர்.சசிகலா கலை2A,B | எஸ்.சரண்ஜா கலை 3A | ரி.கலைவாணி கலை 2A,B | கே.குகப்பிரியா கலை 2A,B



எஸ்.பிருந்தா கலை 2A,B | ரி.கேமினி கலை 2A,B | வி.பிரதீபா கலை2A,B

## இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி



வேதனையான வரலாற்று நிகழ்வுகள் நடைபெறும் இச் சமகால சூழ்நிலையிலும் எமது மக்களின் ஒரே சொத்தான கல்வியை ஊக்குவிக்கும் நிகழ்வான யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களைப் பாராட்டுவதில். பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை வங்கியானது தனது சமூக மேம்பாட்டின் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இந்தப் பாராட்டு நிகழ்வினை வலம்புரியுடன் இணைந்து கல்வி வலய ரீதியாக நடாத்துகின்றது.

இந்நிகழ்வில் கௌரவம் பெறும் அனைத்து மாணவர்களினதும் எதிர்காலம் சிறக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன். மாணவர்கள் எதிர்காலத்தில் எவ்வாறு தமது ஆளுமையை விருத்தி செய்யலாம் என்பது பற்றிய கருத்துரையை இந்நிகழ்வில் வழங்கும் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.எம்.சின்னத்தம்பி அவர்களையும் இதன் மூலம் பாராட்ட விரும்புகிறேன்.

அதேவேளை இப்பாரிய பொறுப்பினை பொறுப்பேற்று இவ்விழாவினை நடத்த வருடாந்தம் உதவி புரிந்துவரும் வலம்புரியின் சேவைகளையும் சகல உதவிகளையும் தந்துதவும் கல்வித்திணைக்களத்தையும் வாழ்த்துவதில் மன நிறைவு கொள்கிறேன்.

எங்கள் சேவையை உங்களுக்காக வழங்க என்றும் காத்திருக்கும்
தேசத்தின் வங்கியாம் இலங்கை வங்கி சார்பாக.

திரு.ந.சிவரத்தினம்
உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி வடபிராந்தியம்



ஜெ.சர்மிளா கலை– 2A,B | ஏ.அனிற்றா அஜந்தி கலை -2A,B



ஜே.நேகா ஜக்குலின் கலை2A,B | ஜே.சிந்துஜா கலை 2A,B

## வைத்தீஸ்வராக் கல்லூரி




சி.றுகுணாஸ் கலை -2A,B | எஸ்.கல்பனா கலை 3A | எஸ்.தர்ஷினி கலை 2A,B

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி



எஸ்.ஜெயதேவி கலை–3A | ஜே.கிரிஜா–கலை 3A | எஸ்.சிந்துஜா–கலை 2A,B

## ...ன்.ஜோன்ஸ் கல்லூரி




கே.கிருஷ்ண...லரந்தா கணிதம்–2A,B | வி.சயந்தன் வர்த்தகம் -3A | எஸ்.கோபிநாத் கணிதம்–2A,B

எஸ்.ஸ்ரீவாகீசன் –3A




...பிரதீப் ...–3A | எஸ்.ஜொய்.தாருக்ஷன் வர்த்தகம் 2A,B | எஸ்.முரளிகிருஷ்ணா கலை 2A,B | எஸ்.கஜானந்த் கலை 2A,B


## யாழ்.இந்து மகளிர் கல்லூரி



ஜெ.சைந்தவி வர்த்தகம்– 3A | ஜி.தனுஜா வர்த்தகம்– 3A | ஈ.பிரசாந்தி கலை–3A



வை.இந்துஜா கலை–2A,B | ஏ.பிரியந்தினி கலை2A,B | பி.நிரோஷா கலை 3A



சி.பிரமிளா கலை–2A,B | சி.சாம்பவி கலை–2A,B | வி.மயூரிகா கலை–2A,B



எஸ்.ரஜீதா கலை 3A | ஆர்.துஷியா கலை–2A,B | இ.சிந்துஜா கலை–2A,B

கே.சுகன்ஜா கலை–2A,B
ஆர்.கேசிகா கலை–2A,B
எஸ்.கோபிகா–கலை–2A,B
ரி.குகநிதி கலை–2A,B
வி.கஜோதா வர்த்தகம்–2A,B
வி.பிரபாஷினி கலை–2A,B



எஸ்.குமுதா கலை -3A | வைபார்லின்துபாணா கலை 2A,B | ரி.அபிலாசா கலை2A,B | எஸ்.ஜெசுறா கலை 2A,B

பி.சாரங்கி–வர்த்தகம்2A,B
ஏ.அனுசானி – கலை 2A,B
ரி.மதுராந்தி– கலை2A,B என்.குணசாந்தினி –கலை 2A,B
எம்.நிஷாந்தி– கலை2A,B
ஜெ.சோபின்ஜா– கலை2A,B
எஸ்.வாசுகி– கலை 2A,B

## புனித பத்திரிசியார் கல்லூரி



யு.தயாஸ்வரன் உயிரியல் -2A,B | எஸ்.ஏ.ஜோசப் உயிரியல்–2A,B | எஸ்.நரேஷ் வர்த்தகம்– 3A | எஸ்.பெனற் சிங்கர் கலை –3A



ஜே.யூட்பிரதீபன் கலை -2A,B | அன்தோனிஸ் கலை–3A | ஆர்.எவ்.றொசான் கலை–3A



ஏ.நிரோஜித் கலை–3A | எஸ்.அஜித் கலை–2A,B | எஸ்.போர்டினற் கலை–3A



ஜி.ஜோய் ராஜ்மன் கலை–2A,B | எஸ்.அஜந்தன் கலை–3A | எக்ஸ்.ஜஸ்ரின்ராஜா கலை3A

கே.கபில்தாஸ் கலை–3A

## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



பி.பிருந்தா கலை 3A | எஸ்.லிஜா உயிரியல் 3A | வி.றொசற்றா ரஜிதா கலை 3A | ரி.டயானா கலை 3A



எம்.மயூரி–கலை 2A,B | பி.சுரேகா–கலை 2A,B



# Lifeline
# மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

# மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கையும் முடிவின்றி தொடரும் துயர்களும்

கடந்த 20 ஆம் திகதி பாதுகாப்புத் தரப்பினர் வன்னியில் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் இருந்து மக்களை மீட்கும் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் பாதுகாப்பு வலயத்திலிருந்து சுமார் 50 ஆயிரம் பேர் வரையில் கடந்த 21 ஆம் திகதி வரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகை தந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்தப் பத்திரிகை வெளியாகும் போது அந்த எண்ணிக்கையில் கணிசமான அளவு மாற்றம் ஏற்பட்டிருக்கும்.

வன்னியிலிருந்து வெளியேறிய மக்களில் பெருமளவானவர்கள் வவுனியாவிற்கு அழைத்து வரப்பட்டதாகவும் நூற்றுக்கணக்கானவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவு வழங்கல் தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அடனான்கான் கருத்துத் தெரிவிக்கையில், வன்னியிலிருந்து வருகை தந்துள்ள மேலதிகமான மக்களுக்கு உணவு வழங்குவதற்கான வசதி தம்மிடம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

வவுனியாவிலுள்ள உலக உணவு திட்டத்தின் களஞ்சியசாலைகளுக்கு கொழும்பிலிருந்து பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதாகவும் எனினும், அங்கு சேமிக்கப்பட்டுள்ள பொருட்கள் மூலம் உடனடி உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



புதுமாத்தளன் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு பகுதிக்கு கடந்த 21ஆம் திகதி இடம்பெயர்ந்து வந்தவர்களை படத்தில் காணலாம்.

வன்னியில் உள்ள உலக உணவுத் திட்டத்தின் களஞ்சிய சாலையில் தற்போது 800 மெட்ரிக் தொன் நிறையுடைய உணவுப் பொருட்கள் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த உணவுப் பொருட்கள் ஒரு இலட்சம் பேருக்கு 16 நாட்களுக்குப் போதுமானது என்றும் அடனான்கான் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வன்னிப் பாதுகாப்பு வலயத்திலிலுள்ள சிறுவர்கள் தொடர்பில் UNICEF நிறுவனம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. UNICEF நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் டேனியல் டூல் சிறுவர்கள் வன்னியிலிருந்து வெளியேறாத பட்சத்தில் அதிகமான சிறுவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாக அண்மையில் தெரிவித்துள்ளார். வன்னியிலிருந்து புதிதாக வெளியேறியுள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கையிலுள்ள ஊடக அதிகாரியான ஜேம்ஸ் எல்டர் கருத்துத் தெரிவிக்கையில், இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை நிறைவு செய்ய அதிகமான வளங்களும், மனித வலுவும் தேவைப்படுகிறது. இம் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது குறித்து அரசாங்கம் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும். UNICEF நிறுவனம் ஏனைய பங்குதாரர் நிறுவனங்களோடு இணைந்து இந்த தேவைகளை சமாளிக்கும் நிலையில் உள்ளது. எமது அமைப்பு சிறுவர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் தேவைகளுக்கே முன்னுரிமை வழங்கும் என்றார்.

இந்நிலையில் இந்த அவசர காலத் தேவையை நிறைவு செய்ய UNICEF அமைப்பிற்கு 3.5 மில்லியன் டொலர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றது. சுகாதாரம் போசாக்கு நீர் பாதுகாப்பு கல்வி என்பவற்றிற்கே இந்த நிதி தேவைப்படுகின்றது.

> UNICEF நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் டேனியல் டூல், சிறுவர்கள் வன்னியிலிருந்து வெளியேறாத பட்சத்தில் அதிகமான சிறுவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாக அண்மையில் தெரிவித்துள்ளனர்.


தொடரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் மேலும் அதிகளவில் இடம்பெயரலாம் என மனித நேய அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. பாதுகாப்பு வலயத்திலும் நீண்டு செல்லும் யுத்தம் முல்லைத்தீவின் கரையோரங்களில் குருதி வெள்ளத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

நெருக்கடி நிலை தணிந்து இந்த மக்கள் இயல்பு வாழ்விற்கு விரைவில் திரும்பி அவர்களின் வாழ்வை மீண்டும் வாழவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு

"மீண்டும் வாழ்வோம்" நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிமுதல் 9.45 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW. Internews. lk) என்ற இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

# "மீள்குடியேற்றம் எப்பொழுதுமே ஒரு சிக்கலான பிரச்சினை"

## மனித உரிமைகள் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர் கெலின்



மனித உரிமைகள் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர் கெலின்

இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமைகள் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வோல்டர் கெலின் அவர்களின் கருத்துக் குறித்து இந்த நேர்காணலில் கேட்டறிந்துள்ளோம்.

*இடம்பெயர்ந்தோர் நிலைபற்றி உங்களது பிரதான கரிசனைகள் யாவை?*

நான் நினைக்கின்றேன் இரண்டு விதமான கரிசனைகள் இருக்கின்றன என்று. ஒன்று மனித நேய நிலைமைகளுடன் மிகவும் நெருக்கமாகத் தொடர்புபட்டது. சில இடைத்தங்கல் முகாம்கள் குறிப்பாக வவுனியா நகரத்தில் உள்ளவைகள் மிகவும் சன நெருக்கடி மிக்கவையாக காணப்பட்டன. இரண்டாவது கரிசனை மக்களிடம் நடமாட்டத்திற்கான சுதந்திரம் இல்லாமல் இருப்பது பற்றியதாகும். அதன் அர்த்தமாவது குடும்பங்களை மீள இணைக்கும் செயன்முறை மிகவும் தாமதமாகவே நடைபெற்று வருகின்றது. மிகவும் பாதிப்புற்ற நிலையிலுள்ள மக்கள் இந்த முகாம்களில் வாழ்கின்றார்கள். அவர்களால் யாருக்கும் எந்த வித அச்சுறுத்தலும் இல்லை. வயது முதிந்தோர், அங்கவீனமுற்றோர், பராமரிப்பற்ற சிறுவர்கள் மற்றும் சிறு குழந்தைகளைக் கொண்ட இளம் தாய்மார்கள் யாரின் தயவுமின்றி வாழ்கின்றார்கள். இந்த மக்களை விடுவிப்பது மிகவும் முக்கியமானதென நான் நினைக்கின்றேன். ஏனைய மக்களை பொறுத்த அளவிலே அவர்களை பதிவு செய்து குற்றமற்றவர்களா என கண்டறிவது மிக முக்கியமானதாகும். இதன் காரணமாக அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தினை தாமதமின்றி வழங்க முடியும். இறுதியாக இந்த முகாம்களில் குடிமைத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில் அது மிக முக்கியமானதாகும். குடிமைத் தன்மையானது இரண்டு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. ஒரு புறத்திலேயே இந்த முகாம்கள் யாவுமே சிவில் நிர்வாகத்தினுள் கொண்டு வரப்பட வேண்டும். இராணுவம் முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்க வேண்டும். பாதுகாப்பு என்று வரும் போது மட்டும் முகாம்களுக்கு வெளியே இராணுவம் வகிப்பதற்கான பாத்திரம் இருக்கின்றது. ஆனால் முகாம்களுக்கு உள்ளே அல்ல. பொதுமக்களில் இருந்து எல்.ரி.ரி.ஈ. போராளி களை பிரித்தெடுக்கின்ற ஒரு பிரச்சினையும் இருக்கின்றது.

*இப்பிரச்சினைகளை அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது?*

நான் அரசாங்கத்துடன் கலந்துரையாடிய போது இப்பிரச்சினைகள் பற்றி அரசாங்கம் எதுவித மறுப்பையும் தெரிவிக்காமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். குடும்பங்களை மீள இணைத்தல், மற்றும் நடமாட்டத்திற்கான சுதந்திரம் போன்ற முகாம்களின் குடிமைப் பண்புகளின் முக்கியத்துவத்தினை அரசாங்கமும் கோடிட்டுக் காட்டியது. என்னுடைய கரிசனை என்னவென்றால் இச் செயன்முறை இதுவரையில் மிகவும் தாமதமாக இருந்து வருவதேயாகும். இதற்கு அரசாங்கம் விரைவில் தேவையான நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

*வவுனியா மற்றும் மன்னாரிலுள்ள இடம்பெயர்ந்தவர்களின் நிலைமைகளை மேம்படுத்த என்ன நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட முடியும்?*

நிச்சயமாக அவையாவன, மிகவும் பாதிப்புறும் நிலையிலுள்ளவர்களை விடுவிப்பது, அவர்களுக்கு மாற்றுத் தீர்வுகளைக் காண்பது, மிகுந்த சன நெருக்கடி உள்ள இடைத்தங்கல் முகாம்களிலேயேயுள்ள நெருக்கடியை குறைப்பது, குடும்பங்களை மீள இணைக்கும் செயன் முறையை துரிதப்படுத்துவது இவற்றினை விரைவாகச் செய்ய வேண்டும். செய்ய முடியும்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# குடாநாட்டிற்கு இடம்பெயர்ந்த மக்களும் மத அமைப்புகளும்

வன்னியில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளால் அங்கிருந்து வெளியேறும் மக்களில் பெரும்பாலானவர்கள் வ்வுனியாவிற்கு வருகை தருகின்றனர். அவ்வாறு வருகை தரும் மக்களை தங்கவைப்பதற்கும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசாங்கமும், அரச சார்பற்ற அமைப்புகளும் பல்வேறு மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கியும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து ஆயிரத்து 988 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 744 பேர் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டிலுள்ள 7 முகாம்களில் இடம்பெயர்ந்தவர்களை வைத்து பராமரிப்பதாகவும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை விட மேலதிகமாகத் தேவைப்படும் உதவிகளை ஐக்கிய நாட்டு நிறுவனங்களும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் தாமாக முன்வந்து வழங்குவதனால் அவற்றையும் தாம் பெற்றுக்கொண்டு இடம்பெயர்ந்த மக்களுக்கான பராமரிப்புப் பணியை தொடர்ந்து சீராக முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

அரச சார்பற்ற அமைப்புகளுடன் மத அமைப்புகளும் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வ்ழங்கி வருகின்றன. யாழ் மாவட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியம் இடம்பெயர்ந்த மக்களின் தேவைப்பாடுகளை கேட்டறிந்து அவற்றை பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அந்த அமைப்பின் தலைவரும் நல்லை ஆதின குருமகா சன்னிதானமும் ஆன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

அவர் இடம்பெயர்ந்த மக்கள் குறித்து மேலும் தெரிவிக்கையில், இடம்பெயர்ந்தவர்கள் பொருட்கள் எவற்றையும் தம்முடன் எடுத்து வரவில்லை, பல இடம்பெயர்வுகள் இலங்கையில் ஏற்



வவுனியாவில் உள்ள மெனிக்பாம் அகதி முகாம்

பட்டுள்ள போதிலும் தற்போது இடம்பெற்றுள்ள இந்த இடம்பெயர்வின் போது மக்கள் எவற்றையும் தம்முடன் எடுத்துக் கொண்டு செல்ல முடியவில்லை. எல்லாவற்றையும் அவர்கள் இழந்த நிலையில் தான் இருக்கின்றார்கள் என்றார்.

இதேவேளை HUDEC - CARITAS எனப்படும் கிறிஸ்தவ அமைப்பு முதல் கட்டமாக சுமார் 10 இலட்சம் பெறுமதியான உடு புடவைகளை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கியுள்ளது.

அதேவேளை சமைத்த உணவுகளையும் இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ச்சியாக தாம் வழங்கி வருவதாக அந்த அமைப்பின் இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்வுகளால் உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்துள்ள மக்களுக்குத் தேவைப்படும் உளவள ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்பது அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளாரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மக்களுக்கு உளவியல் ஆற்றுப்படுத்தல்கள் தேவையாகவுள்ளது. அத்தோடு சிறுவர்களுக்கு விளையாட்டின் மூலம் மன அழுத்தங்களை குறைப்பதற்கான நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை யென்பது கவலையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். யார் குற்றியும் அரசியானால் சரி என்ற ஒரு பழமொழி எமது ஊர்களில் வழக்கத்தில் உள்ளது. அதுபோல் எல்லாவற்றையும் இழந்து இடம் பெயர்ந்து வாழும் இந்த மக்களுக்கு எல்லோரும் உதவ வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ் வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

தாழ்ந்த இலட்சியத்தில் வெற்றியடைவதைக் காட்டிலும், உயர்ந்த இலட்சியத்தில் தோல்வி பெறுவது மேலானது. ~ பிரான்ஸ்

வலம்புரி

# சர்வதேச அழுத்தத்திற்கு இலங்கையைவிட இந்தியாவே அதிகம் பதறுகிறது

இலங்கையில் போரை நிறுத்துமாறு எழுந்துள்ள சர்வதேச அழுத்தம் வேகமெடுத்துள்ளது.

இதில் ஐ.நா. சபையினதும் அமெரிக்காவினதும் அதட்டலால் இலங்கை அரசு பதறிப் போயுள்ளதாயினும், அதனை விட இந்தியாவின் பதறல் அதிகமாக இருப்பது அதிர்ச்சி தருகிறது.

யுத்தம் நடப்பது வன்னியில். யுத்தத்தால் அழிவது தமிழ் மக்கள். நிலைமை இதுவாக இருக்கும்போது இந்தியா இந்தளவு தூரம் பதறுவது எதற்காக?

வன்னியில் யுத்தம் ஆரம்பித்தது முதல் யுத்தத்தை நிறுத்த உதவுமாறு இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்ட போதெல்லாம் அமைதி காத்த இந்தியா இப்போது தனது இரு தூதுவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோர் இலங்கைக்கு அவசர அவசரமாக வருகை தந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்திவிட்டு சென்றுள்ளனர்.

இந்திய தேசத்தின் இருபெரும் இராஜதந்திரிகள் கூட்டாக இலங்கைக்கு வந்து ஜனாதிபதியுடன் பேசினார்கள் என்றால் அது சாதாரணமான விடயமல்ல.

இந்தியாவின் வெளிப்படையான கருத்து இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென்பதாகும்.

இதுவே இந்தியாவின் நிதர்சனமான நிலைப்பாடாயின் மேனனும், நாராயணனும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த கையோடு இலங்கை அரசு உடனடியாக யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்திருக்க வேண்டும்.

ஆனால் எதுவுமே நடைபெறவில்லை என்பதால் இரண்டு இராஜதந்திரிகளும் இலங்கைக்கு வருகை தந்ததற்குள் வேறு விடயங்கள் உண்டென்பது தெளிவாகின்றது.

அதாவது, ஐ.நாவும் அமெரிக்காவும் இலங்கை விவகாரத்தில் தலையிட தயாராகி விட்டதால், பதறிப் போயுள்ள இந்தியா சில செய்திகளுடன் தனது தூதுவர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் தலையிடுமாயின் இந்தியாவும் உள்ளார்ந்த விடயங்கள் தெரியவந்து விடுமென்பதால் இலங்கையை விட அந்த நாடு அதிகமாகவே பதறுகிறது. பதறவேண்டியுள்ளது.

# நேர்மையான அரசியலின் பிதாமகர் தந்தை செல்வா



ஈழத்துக் காந்தி, தந்தை செல்வா என எல்லோராலும் அழைக்கப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தாபகரும், அரசியல் தீர்க்கதரிசியுமான சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் சிரார்த்த தின நிகழ்வுகள் இன்று காலை அன்னாரது நினை விடத்தில் இடம் பெறவுள் ளது.

26.04.1981 இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட அன்னாரது நினைவுத் தூபி ஒரு கால் நூற்றாண்டைத் தாண்டி நிமிர்ந்து நிற்பதைக்காண தமிழுணர்வுள்ள, தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற எவரும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவர்.

தந்தை செல்வா தம்வாழ்நாளில் வரித்துக்கொண்ட தமிழின ஒற்றுமை, சமஷ்டி முறையிலான தமிழினத் தன்னாட்சி என்பன இப்பொழுதும் நிலைத்து சர்வதேச அங்கீகாரத்துடன் நிற்பதை இந்த நினைவுத்தூபிநினைவுபடுத்தி நிமிர்ந்து நிற்கின்றது. இந்தநேரத்தில் இந்த நினைவுத் தூபியின் அமைவிடத் தெரிவு பற்றிய ஒரு தகவலை நினைவு கூர்வது பொருத்தமானதாக இருக்கும்.

## இன்று அவரின் சிரார்த்த தினம்

தந்தை செல்வாவுக்கு நினைவுத் தூபி அமைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதும் அதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் எல்லோரும் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது நான் யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளராக இருந்தேன். கூட்டணித் தலைமை என்னுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அதேநேரம், யாழ். நகரப் பகுதியில் தூபிக்கு இடம் கொடுக்கக்கூடாதென்ற அழுத்தமும் எனக்கிருந்தது.

எனினும் இந்த இடமே பொருத்தமானது என கூட்டணித் தலைமைக்கு காண்பித்து அதற்கான கடிதத்தையும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தேன். இந்த இடம் தான் யாழ் குடாநாட்டின் மைய முடிச்சு ஆகும். தந்தை செல்வாவிடமிருந்து தன்மானத், தன்னாட்சி, சமஷ்டி முறைமை ஆரம்பித்துப் பரவுவது போல யாழ் குடாநாட்டின் சகல வீதிகளும் இங்கிருந்தே விரிந்து செல்கின்றன.

அரசியலிலும் நேர்மையாக செயற்பட முடியும் என்று செயலில் காட்டியவர் தந்தை செல்வா. 1965 இல் ஏற்பட்ட பிரதமர் டட்லி சேனநாயக்கவுடனான அரசியல் உறவு 1968 இல் முறிந்தபோது, உடனடியாக மக்கள் முன் நம்பி ஏமாந்து போனோம் என்று நேர்மையாகக் கூறிய அவரது அணுகு முறை போற்றுதற்குரிய முன்னுதாரணம்.

அவர் தாம் தவறு செய்துவிட்டோம் என்று பகிரங்கமாக கூறித் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல், தாம் அரசுக்கு ஆதரவு வழங்கியதை நியாயப்படுத்தியிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. மேலும் அரசுக்கு ஆதரவு வழங்க முடிவெடுத்தபோதும் கூட தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் மந்திரி பதவி வகிக்க அனுமதிக்காமல், செனட்டர் எம். திருச்செல்வத்தை உள்ளூராட்சி அமைச்சராக்கினார்.

பதவிகளிலும் பார்க்க இனவிடுதலையை மிகவும் நேசித்தவர் தந்தை செல்வா. தமது வாழ்நாளில் தமது சொத்துக்களைத் தமிழின விடுதலைக்காக இழந்தவர். ஆனால் எந்தக் காலத்திலும் வாய்ப்புக்கள் தேடி வந்த போதும் எந்த பதவியையும் ஏற்க மறுத்த பெருமைக்குரியவர் அவர்.

தந்தை செல்வா தமது அரசியல் எதிரிகளைக்கூட அநாகரிகமான வார்த்தைகளால் தூசித்ததும்கிடையாது: விமர்சித் ததும் கிடையாது. இதுவே அவரது பெரிய பெருந்தன்மை. கண்டிப்பதுதான் அரசியல் என நினைக்கின்ற காலத்தில் நாகரிகமாகவும் பண்பாகவும் அரசியல் செய்ய முடியும் என நடைமுறையில் வாழ்ந்து காட்டியவர்.

சீ.வீ.கே. சிவஞானம்
ஓய்வுபெற்ற யாழ்.மாநகர ஆணையாளர்

ஒருகால் நூற் றாண்டைத் தாண்டி நிற்கும் தந்தை செல்வா நினைவிடம் இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்து நின்று அவரது அரசியல் நேர்மை, நிதானம், அர்ப்பணிப்பு, தீர்க்கதரிசனம் போன்ற நற்பண்புகளைப் பறைசாற்றி நிற்கும்.

# இலங்கை விவகாரங்களில் அமெரிக்கா அவசியமற்ற முறையில் தலையீடு செய்கின்றது

(கொழும்பு)


இலங்கையின் உள் விவகாரங்களில் அமெரிக்க அரசாங்கம் அவசியமற்ற வகையில் தலையீடு செய்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்குலக நாடுகள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தேவையற்ற வகையில் மூக்கை நுழைத்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபர்ட் ஓ பிளெக் தனது தகுதிக்கு மீறிய வகையில் அறிக்கைகள் மற்றும் பொது மக்கள் நிலைமை, யுத்த நடவடிக்கைகள் தொடர்பான தகவல் வெளியிட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தங்களது தாளத்திற்கு ஏற்ற வகையில் இலங்கை அரசாங்கத்தை ஆட்டுவிக்க அமெரிக்காவும், பிரித்தானியாவும் அதீத முயற்சி மேற்கொண்டுவருவதாக எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# நீங்களே உயிர்ப்பின் சாட்சிகள்



நீதிமன்றத்துக்கு சென்றால் சாட்சிகள் தேவை குற்றங்களை நிரூபிக்க. திருமணத்திற்குச் சென்றால் சாட்சிகள் தேவை – மண ஒப்பந்தம் சரிபார்க்க.

ஆனால் உயிர்ப்பிற்கு? ஒருவன் உயிர்த்தெழுந்தான் என்று எப்படி நிரூபிக்க முடியும்? காரணம், இறப்பை மட்டும் பார்த்திருக்கின்றோம். ஆனால் இறந்தவன் மீண்டும் உயிர் பெற்று வந்தான் என்று இதுவரை பேச்சில்லையே.

பின், இயேசு என்ற மனிதர் உயிர்த்தார் என்று எப்படி நிரூபிக்க முடியும்? ஆம்... வரலாற்று இயேசு உயிர்த்தார். என்பதற்கு நிறைய சான்றுகள் உள்ளன. இன்றைய நற்செய்தியில் அதை நாம் தெளிவாகக் காண்கிறோம். இயேசு உயிர்த்த பின் தன் சீடர்களுக்கு பலமுறை காட்சி கொடுத்து, உங்களுக்குச் சமாதானம் என்று கூறியிருந்தார். தோமாவுக்குக் காட்சி கொடுத்து தன் விலாவிலும், கைகளிலும் அவருடைய விரலை இட்டுப் பார்க்கச் சொல்கின்றார். உயிர்த்த பின் மதலேன் மரியாவுக்குக் காட்சி கொடுத்தார் என்று நற்செய்தியாளர்கள் எழுதுகின்றனர். எம்மாவூஸ் சீடர்களுக்குக் காட்சி கொடுத்து தம்மை வெளிப்படுத்தியிருக்கின்றார். எல்லாவற்றிலும் மேலாக, இன்றைய நற்செய்தியில் லுக்கா நற்செய்தியாளர் இன்னும் சற்று ஆழமாக உயிர்த்த இயேசு தன் திருத்தூதர்களுக்கு திபேரியாக் கடற்கரையில் காட்சி கொடுத்து உண்பதற்கு ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டு அவர்களோடு அப்பத்தையும் மீனையும் உண்டார் என்று சொல்கின்றார். அப்படியென்றால் வரலாற்று இயேசு உயிர்த்து விட்டார் அல்லவா?

## பரமபிதா காட்டிய பாதை

ஆனால் வாழ்க்கை இயேசுதான் இன்னும் உயிர்க்கவில்லை. ஆம், அந்த வாழ்க்கை இயேசு உயிர்க்க வேண்டும் என்றால் அதற்கு நம் வாழ்வுதான் சாட்சியாக இருக்க வேண்டும். அதற்காகத் தான் இயேசு நம்மை சாட்சிகளாக அழைக்கின்றார்.

நம்முடைய வாழ்வின் நிலையைப் பொறுத்துத்தான் இயேசு இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றாரா? இல்லையா? என்று மக்கள் நம்புவார்கள்.

இன்று நம் கிறிஸ்தவ வாழ்வு, விசுவாச வாழ்வு உயிர்ப்பின் மக்களாக நம்மை பறை சாற்றுகின்றதா? இந்தக் கேள்வி மிகவும் அவசியமானது, காலத்தின் தேவையும் கூட.

இன்று நம் விசுவாச வாழ்வு தேய்ந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் நம்மால் உயிர்த்த இயேசுவுக்குச் சான்று பகர முடியவில்லை. அதனால் தான் காந்தி "நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன்... ஆனால் கிறிஸ்தவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை" என்று சொன்னார். உயிர்த்த ஆண்டவர் இன்றும் நம் வாழ்க்கை முறை மாற வேண்டும், நம் மன நிலைகள் மாறவேண்டும், நம் எண்ணங்கள் உயரவேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது முதல் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்வு.

*ஜோன் றொபேர்ட்.*

# தமிழர்களை அடிமைப்படுத்த நினைத்தால் யுத்த வெற்றிகளுக்கு நீண்ட ஆயுள் கிட்டாது

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களை அடிமைப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் யுத்த வெற்றிகள் நீண்டகாலத்திற்கு நிலைக்காதென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களது உரிமைகள் வழங்கப்படவில்லை. தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக தமிழர்கள் இன மத விழுமியங்களை விமல் வீரவன்ச போன்றோருக்கு ஒருபோதும் காட்டிக்கொடுக்கமாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொங்குதமிழ் நிகழ்வுகளில் கலந்து கொண்ட மனோகணேசன் மற்றும் சம்பந்தனை என்ன காரணத்திற்காக கைது செய்ய வேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விமல் வீரவன்ச சித்த சுவாதீனமுற்று பிதற்றி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

2002 ஆம்ஆண்டு யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் ஓர் அரசியல் பிரவாகத்தை உருவாக்கியிருந்தனர். அந்தக் காலப் பகுதியிலேயே பொங்குதமிழ் நிகழ்வு நடைபெற்றதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஓர் அரசியல் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைதுசெய்யக் கோருவது இனவாதத்தைத் தூண்டும்செயலாகும் என தெரிவித்துள்ள அவர்,

பொங்குதமிழ் நிகழ்வு இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்றதாகவும், ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நுவரெலியாவிலும் இவ்வாறானதொரு நிகழ்வு நடைபெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொங்குதமிழ் நிகழ்வுகளில் கலந்து கொண்டு தற்போது ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தொண்டமான், சந்திரசேகரன், முத்து சிவலிங்கம், ராஜித சேனாரத்ன ஆகியோர் நிரபராதிகள் என் றால், எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் மனோகணேசன் எவ்வாறு குற்றவாளியானார் என கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ-6)

# இன்னுமொரு நான்கு நாட்களுக்குள் யுத்தம் நிறைவடையும்

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

இன்னும் நான்கு நாட்களுக்குள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்தம் நிறைவுக்கு வரும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைப் பாதுகாக்கும் விசேட இராணுவ நடவடிக்கைகளை படையினர் மோதல் தவிர்ப்பு வலயத்தின் வடபகுதியின் ஊடாக ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராணுவம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை எனவும், படை வீரர்களது ஆயுதங்கள் மட்டுமே யுத்த களத்திற்கு எடுத் துச் செல்லப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதல்களினால் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக புலிகள் மேற்கொண்டு வரும் பிரச்சாரம் உண்மைக்கு புறம்பானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# மேனன், நாராயணனின் விஜயம் வழமையானது

## வெளியுறவு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் கே.நாராயணன் மற்றும் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர்மேனன் ஆகியோரின் இலங்கை விஜயமானது வழமையானதாகும். இது இராஜதந்திர மட்டத்தில் இருதரப்பு உறவுகள் குறித்து ஆராய்வதற்காக இடம்பெறும் விஜயமாகும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலிதகோஹன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இந்திய உயர்மட்ட பிரதிநிதிகளின் இலங்கை விஜயமானது வழமையான ஒன்றாகும். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவே அவர்கள் விஜயம் செய்தனர்.

ஒரு வலயத்தில் இருக்கும் இரண்டு நாடுகளின் பிரதிநிதிகள் அந்த நாடுகளுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவது பொதுவான விடயமாகும். சிலநாட்களுக்கு முன்னர் நான் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தேன். அதன்போது இந்திய உயர்மட்ட அதிகாரிகளுடன் பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்விடயம் குறித்து கருத்துவெளியிடுகையில், இந்தியாவுடன் இலங்கை விசேடமான மற்றும் நெருக்கமான உறவுகளை பேணிவருகின்றது. இந்நிலையில் இந்தியாவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது புதுமையான விடயமல்ல. பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக அவர்கள் வருகை தந்தனர். இது ஒரு வழமையான விஜயம். இரண்டு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியில் இடம்பெறும் விடயமாகும் என்றார். (ஓ-6)

# எதிர்க்கட்சி தலைவருடன் பகிரங்க விவாதம் நடத்த ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பகிரங்க விவாதமொன்றை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார். முக்கிய பிரச்சினைகள் குறித்த எதிர்கட்சியின் கேள்விகளுக்கு பதிலளிக்கத் தாம் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம், சட்டம் ஒழுங்கு மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுத் திட்டங்களை முன்வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தவறியுள்ளதாக எதிக்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தம் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சியின் கேள்விகளுக்கு பகிரங்க மேடையில் பதிலளிக்க முடியுமா? என அண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு சவால் விடுத்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் விவாதம் நடத்தி தனது நேரத்தை விரயமாக்க விரும்பவில்லை என ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்திருந்தார். எனினும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் விடுத்த பகிரங்க சவாலை ஏற்றுக் கொண்டு விவாதமொன்றுக்குச் செல்லத் தயார் என அறிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் இந்த விவாரதம் நடத்தப்பட வேண்டும் எனவும் காலிமுகத்திடலில் இதன்னை நடத்த முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# பற்றிக் பிறிண்டிங் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

ஐ.எல்.ஓ.நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். பிரதேச செயலகத்தின் தொழில் ஊக்குவிப்பு செயற்திட்டத்தின் கீழ் கடந்த 22ஆம் திகதிமுதல் பற்றிக் பிறிண்டிங் பயிற்சிநெறி அளிக்கப்பட்டு வருகிறது.

இப் பயிற்சி நெறிக்கு பாசையூர் மேற்கைச் சேர்ந்த 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வருவதுடன் 5பயனாளிகளுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்குரிய பயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. (ஓ-3)


NEW COST CUTTER SUPER MARKET

New Cost Cutter

நியூகோஸ் கட்டர் சுப்பர் மார்க்கட்

யாழ்-மருத்துவமனை முன்பாக





* அனைத்துத்தர வருமான வகுப்பினருக்கும் அவரவர்களுக்குத் தேவையான எல்லா வகைப் பொருட்களும்
* ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்
* பாதுகாப்பான விசாலமான வாகனத் தரிப்பிட வசதி

எம்மிடம்

* சிறுவர்களுக்கு - பாடசாலை உபகரணங்கள் - விளையாட்டுச் சாதனங்கள் - இன்னோரன்ன பொருட்கள்
* இளையோருக்கு - அழகு சாதனப் பொருட்கள் - அன்பளிப்புப் பொருட்கள் - சென்ற் வகைகள் - கிறீம் வகைகள்
* குடும்பத்தினருக்கு- வீட்டுப்பாவனைப் பொருட்கள் - அனைத்து வகைப் பால்மா வகைகள் - Maliban, Munchee , Lucky land போன்ற இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் பல்சுவை பிஸ்கட் வகைகள்- கொழும்பிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட வெவ்வேறு வகையான ELEPHANT HOUSE ICE CREAM வகைகள்

* மென்பானங்கள், உள்ளூர் உற்பத்திகளான நெல்லிகிறஸ், Cordial வகைகள்
* சிற்றுண்டி வகைகள்-மிக்சர் வகைகள்,கச்சான் பருப்பு வகைகள்
* அனைத்து வயதினருக்குமான DSI,BATA பாதணி வகைகள்
* சுகாதார முறைப்படி பொதி செய்த மளிகைப் பொருட்கள்
* வீட்டுத் தோட்ட பூ, மரக்கறி விதைகள் போன்றவை

மலிவாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:

எல்லாக் கொள்வனவுக்கும் கடன் அட்டைகளைப் (CREDIT CARD) பயன்படுத்தி பணச்சிக்கலை நிவர்த்தி செய்யவும்

யாழ். நகரில் முதன்முறையாக இலத்திரனியல் விலைக் கழிவு அட்டை (ELECTRONIC DISCOUNT ` CARD) முறையினை சித்திரைப் புத்தாண்டு தினத்திலிருந்து அமுல் நடாத்தவுள்ளோம். அதிகப் பெறுமதியில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள் ளோம் என்பதை பெருமிதத்துடன் அறியத் தருகிறோம்.

(காலை 8.00 மணிமுதல் மாலை 7.00மணிவரை திறந்திருக்கும்)

NEW COST CUTTER SUPER MARKET

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 484, Hospital Road, Jaffna. தொ.பே.021 222 9717

# டெக்கான் சார்ஜர்ஸின் வெற்றி தொடர்கிறது மும்பை இந்தியன்ஸ் அணியின் போராட்டம் வீண்

(டர்பன்)

ஓஜாவின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் எட்டு அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடை பெற்று வருகிறது.

இதில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றின் 12ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதியது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கேர்ஸல் கிப்ஸ் 44 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 58 ஓட்டங்களையும் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 20 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் டரண் சிமித் 22 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் லசித் மலிங்கா, பிரவோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங், ஜெயசூர்யா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆரம்பத்தில் ஜெயசூரியா ஒரு ஓட்டத்துடன் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த டெண்டுல்கர்-டுமினி ஜோடி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

எனினும் பிரயன் ஓஜாவின் துல்லியமான பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்த மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் டுமினி 40 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 47 ஓட்டங்களையும் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் பிரவோ 21 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 8 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் பிரயன் ஓஜா 4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் எட் வோட்ஸ், ஆர்.பி.சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்றதுடன் தனது 4ஆவது போட்டியில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 3 தோல்வியைச் சந்தித்தது.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக டெக்கான் சார்ஜர் அணியின் பிரையன் ஓஜா தெரிவானார்.



# சைமண்ட்ஸ் சிறப்பான ஆட்டம் 2ஆவது போட்டியில் ஆஸி. வெற்றி



சைமண்ட்ஸின் சகல துறை ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது ஒருநாள் போட்டியில் 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரை சமனிலை செய்தது.

பாகிஸ்தான்-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் 5போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் டுபாய், அபுதாபி ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் டுபாயில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 207 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சல்மான்பட் 57 ஓட்டங்களையும் சயிட் அப்ரிடி 41, அணித் தலைவர் யூனிஸ்கான் 28, சொயிப் அக்தர் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹயூரிர்ஸ் 3 விக்கெட்டுகளையும் ஹோப்ஸ், சைமன்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில்208 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி சைமண்ட்ஸின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 45.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 208 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 58 ஓட்டங்களையும் ஹோப்ஸ் 48 ஓட்டங்களையும் மைக்கெல் கிளார்க் ஆட்டம் இழக்காமல் 39 ஓட்டங்களையும் வோட்சன் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சயிட் அப்ரிடி 2 விக் கெட்டுக்களையும் அஜ்மல், உமர் குல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழியமைத்த சைமண்ட்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறுகிறது.

# சென்னை-கொல்கத்தா மோதல் மழையால் கைவிடப்பட்டது

(கேப்டவுன்)

சென்னை சுப்பர் கிங்ஸ்-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையிலான லீக் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

தென்னா பிரிக்காவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல் தொடரில் நேற்று கேப்டவுனில் இடம் பெறவிருந்த லீக் சுற்றின் 13ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மக்குலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதவிருந்தன.

எனினும் இடை விடாத மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப் படாத நிலையில் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப் பட்டது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 69





உலக கிண்ண தொடரில் முரளிதரன் 6 போட்டிகளில் விளையாடி 216 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார்.

உலக கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணி நாடு திரும்பியதும் மீண்டும் ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகவிருந்த சிங்கர் கோப்பை தொடரில் விளையாட சிங்கபூர் பயணமானது.

இலங்கை, பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் மோதிய சிங்கர் கோப்பை தொடரில் இலங்கை அணியில் முரளிதரன் சேர்க்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி நடைபெற்ற இத்தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் இலங்கை அணி மோதியது. இப் போட்டி மழை காரணமாக முடிபின்றி கைவிடப்பட்டு மறு நாள் மீண்டும் நடத்தப்பட்டது.

பாலா

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.


இதனடிப்படையில் முதலில் துடுப்பெடு த்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளையிழந்து 349 ஓட்டங்களை குவித்தது.

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களை எடுத்தார் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49.4 ஓவர்களில் 315 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுகளையுமிழந்தது.

இதன் மூலம் இலங்கை அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 59 ஓட்டங்களைக் கொடுத்து சலீம் மலிக்(68), ரஷிட் லத்திப் (7) ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.


(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-67



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின்கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# இந்தியக் குழுவினர் இலங்கை விஜயம்

## போர் நிறுத்தம் பற்றி எதுவுமே பேசவில்லை

### ஜனாதிபதியின் செயலாளர் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கொழும்பில் நேற்று முன்தினம் இந்திய உயர் மட்டக்குழு நடத்திய பேச்சுக்களின் போது போர் நிறுத்தம் தொடர்பாக பேசப்படவே இல்லை என ஜனாதிபதியின் செயலாளரும் இந்த பேச்சுக்களில் கலந்து கொண்டவருமான லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

வன்னி நிலைமை தொடர்பாக அவசரப் பேச்சுக்களை நடத்துவதற்காக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தனது சிறப்பு பிரதிநிதிகளாக இந்திய வெளி விவகாரத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோரை நேற்று முன்தினம்கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

வன்னியில் தொடரும் போரால் அப்பாவி பொதுமக்கள் அதிகளவில் கொல்லப்படு வது தொடர்பான இந்தியாவின் கவலையை இலங்கையிடம் வெளிப்படுத்தும் இவர்கள், உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்கள் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் சுமார் 90 நிமிட நேரம் நடைபெற்ற இந்த உய ர்மட்ட பேச்சுக்களின் விபரங்கள் எதுவும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படாமையால் இந்தியா போர் நிறுத்தத்திற்கான அழுத்தத்தை கொடுத்ததா என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. இந்திய தரப்பினர் இது தொடர்பாக எதனையும் கூறவில்லை.

இந்நிலையில் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, இந்திய தரப்பினர் போர்நிறுத்தம் தொடர்பாக எதுவுமே பேசவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்குவது போன்ற விடயங்கள் தொடர்பாகவே இந்திய தூதுக்குழுவினருடன் முக்கியமாக பேசப்பட்டதாகவும் அதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப் பட வேண்டும் என்பதில் இந்தியத் தரப்பினர் அக்கறை காட்டியதாகவும் லலித் வீரதுங்க மேலும் தெரிவித்தார். (ந-5)

### படையினர்...

மோதல்கள் அதிகரித்துள்ளதால் அப்பகுதியில் எஞ்சியுள்ள மக்கள்மிகுந்த சிரமங்களை எதிர் கொள்வதாக முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் கே. பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அங்கு உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்த அவர், அவை குறித்து அரசாங்க மேலதிக அதிகாரிகளுக்கும் உதவி நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ந-5)

### விடுதலைப் புலிகள் ஆயுதங்...

வருவதற்கு இந்தியா எடுத்துவரும் முயற்சிகளை ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், ராஜபக்ஷ அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மோதல்களை முடிபுக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இணைத்தலைமை நாடுகளும் ஜீ-8 நாடுகளும் மிகவும் நெருக்கமாக இந்த விடயத்தில் இணைந்து பணியாற்றுவதாகத் தெரிவித்த வூட், மோதல்களுக்கு முடிபுக்கட்ட சர்வதேச சமூகம் தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இலங்கை ஜனாதிபதிக்கும் ஐ.நா. செயலாளரின் பிரதிநிதி நம்பியாருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டபடி மோதல் தவிர்ப்புப் பிரதேசத்துக்கு ஐ.நா. பிரதிநிதிகளை அனுப்பும் ஐ.நா. செயலாளரின் தீர்மானத்தை நாம் பூரணமாக ஆதரிக்கின்றோம்.

இயன்றளவு விரைவில் ஐ.நா. பிரதிநிதிகள் மோதல் தவிர்ப்புப் பிரதேசத்துக்குச் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். சோதனை நிலையங்களைக் கடந்து உதவிப் பொருள்கள் தொடர்ச்சியாக அனுப்பப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான பதிவுகளை ஐ.நாவுடன் அரசாங்கம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதேநேரம் மக்களைத் தங்கவைப்பதற்குத் தேவையான மேலதிக கூடார வசதிகளை உருவாக்க வேண்டும்.

மோதல் தவிர்ப்புப் பிரதேசத்திலிருந்து மருத்துவத் தேவையுள்ளவர்களை வெளியேற்றும் நடவடிக்கையைத் தொடர வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் வழமையான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதுடன் இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியாவுடன் தொடர்பில் இருப்பதாக வும் வூட் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்தப் பகுதியிலிருந்து வெளியேறியிருக்கின்ற போதிலும் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதுடன் இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியிருப்பதாக வூட் தெரிவித்தார்.

இவர்களுடைய பாதுகாப்புத் தொடர்பாக அமெரிக்கா மிகுந்த கவலையடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

**தவறிவிட்டது**

காரைக்கால் வீதி, இணுவிலை சேர்ந்த செல்வராசா யசோதா என்பவரின் தேசிய அடையாள அட்டை (818522061V), விசேட அடையாள அட்டை என்பன நாச்சிமார் கோவிலுக்கும் இணுவில் கோயில் வாசலுக்குமிடையில் 24/04/2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

கணேசன் சென்ரர், இணுவில் (ஆஸ்பத்திரிக்கு அருகாமை)

தொலைபேசி:0776977759 (C-2423)

## போர் நிறுத்தத்தை வலியுறுத்தினோம் ஓரிரு நாட்கள் பொறுத்திருப்போம்

### அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவிப்பு

(சென்னை)

வேண்டுகோள், கோரிக்கை என்பதை எல்லாம் தாண்டி, உடனே போரை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தி கூறியுள்ளது. நல்லதே நடக்கும், நல்ல முடிபு விரைவிலே வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இரு அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இலங்கை நிலைவரம் தொடர்பாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இந்தியா, இலங்கைக்கு அனுப்பிய இரண்டு தூதர்களும் இலங்கையிலே அந்நாட்டு ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளை சந்தித்து விட்டு டெல்லி திரும்பி இருக்கிறார்கள். டெல்லி திரும்பிய அவர்கள் அதிகாரபூர்வமாக அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்திய அரசின் கவலை, தமிழக மக்களின் கவலையை எல்லாம் இலங்கை அரசிடம் அவர்கள் எடுத்து சொல்லி இருக்கிறார்கள்.

உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று அழுத்தம் திருத்தமான வலியுறுத்தி இருக்கிறார்கள். வேண்டுகோள், கோரிக்கை என்பதை எல்லாம் தாண்டி இந்திய அரசு, இலங்கை அரசை வற்புறுத்தி உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி நம்முடைய தூதர்களின் கருத்துக்களை எல்லாம் கவனமாக கேட்டார் என்று அதிகாரபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. நல்லதே நடக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஓரிரு நாட்கள் பொறுத்திருந்து என்ன நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் என அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார். (ந-5)

## போர் நிறுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை கோத்தபாயவின் கருத்தை நாராயணன் குழு ஏற்பு

கொழும்புக்கு பயணம் செய்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணன், வெளியுறவுச்செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் தமிழர்களுக்கு சாதகமான முறையில் எதனையும் கலந்துரையாடவில்லை எனவும் இலங்கை- இந்திய அரசுகளின் நலன்களைப் பற்றியே ஆராய்ந்தனர் என்றும் கொழும்பில் உள்ள இந்திய செய்தியாளர் ஒருவர் இந்திய தூதரகத்தை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளார். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து வன்னி பெருநிலப் பரப்பின் தற்போதைய நிலைமை குறித்து நேற்று முன்தினம் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் ஒன்றை செய்ய வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று சந்திப்பில் கலந்து கொண்ட கோத்தபாய ராஜபக்ஷ அழுத்திக் கூறியதாகவும் அதனை நாராயணன் குழு ஏற்றுக் கொண்டது என்றும் கொழும்பு தகவல்கள் கூறுகின்றன. (ந-5)

### மூள்வி...

மிக் கிபீர் எவ்-7 ரக வானூர்திகள இணைந்து தாக்குலை நடத்தன. நேற்று இரண்டு தடவையாக விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட போது பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்த பலர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

### மோதல் இடம்பெறும் பகுதி...

நடைபெறும் பகுதிகளில் சிக்கியிருக்கும் மக்களை மீட்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித நேய விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இன்று கொழும்புக்கு வரவுள்ளார்.

இரண்டு தரப்பும் மோதல்களை சமாதான முறையில் முடிபுக்கு கொண்டு வர வேண்டும் என ஜோன் ஹோம்ஸ் கோரிக்கை விடுத் துள்ளார். விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக ஒழிக்கப்பட்டாலும் உடனடியாக தேவைப்படும் அரசியல் தீர்வுக்கு அது ஒரு சிறந்த வழியாக அமையாது.

அமைதி வழியிலான தீர்வொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே அனைவரது விருப்பமாகவும் அமைந்துள்ளது என ஜோன் ஹோம்ஸ் பி.பி.சி. செய்தி சேவைக்கு கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் மோதல்கள் நடைபெற்று வரும் பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகள் மனித நேய குழுவொன்றை அனுப்பப் போவதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

இந்த மனித நேயக்குழுவை மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு செல்ல அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டிருக்கும் மக்களை மீட்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதால் மனித நேயப் பணியாளர்களை அங்கு செல்ல அனுமதிக்க முடியாது என இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தமையும் பின்னர் ஐ.நா பிரதிநிதிகளை மோதல்கள் இடம்பெறும் பகுதிக்கு அனுப்பும் திட்டத்தை கொள்ளை ரீதியில் ஏற்றுக் கொண்டதும் தெரிந்ததே. (ந-3,5)

## இராணுவத் தீர்வு காண முற்பட்டால்...

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண இலங்கை அரசு முற்பட்டால் அது இலங்கையின் ஒற்றுமைக்கே ஆபத்தாக முடியும் என்றும் அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் போரினால் அப்பகுதியில் சிக்கியுள்ள அப்பாவி மக்கள் அனுபவித்துவரும் துயரம் அமெரிக்காவை மிகவும் கவலை கொள்ளச் செய்துள்ளது.

அங்கு பலியாவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இரு தரப்பினரும் உடனடியாக சண்டையை நிறுத்தி அங்கு சிக்கியுள்ள அப்பாவி மக்கள் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்க வேண்டும்.

மக்கள் பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்றும் போர் பகுதியில் இருந்து வெளியேறியுள்ள மக்களுக்கு உதவ சர்வதேச குழுக்களையும் ஊடகங்களையும் அனுமதிக்குமாறும் இலங்கை அரசை வெள்ளை மாளிகை கோரியுள்ளது.

போர்ப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை அனுப்புவது தொடர்பாக சர்வதேச அமைப்புக்களுடன் அமெரிக்கா ஆலோசித்து வருவதாக கூறியுள்ள வெள்ளை மாளிகை அறிக்கை, இராணுவ நடவடிக்கை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இலங்கையின் ஒற்றுமைக்கு ஆபத்தாக முடியும் என்று எச்சரிக்கை செய்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கையின் மூலம் முடித்துவிட முனைவது தற்பொழுது தொடரும் துயரத்தை மேலும் சிக்கலாக்கி விடும் என்பது மட்டுமன்றி, அது இரண்டு இனங்களுக்கும் இடையே மேலும் பகைமையை வளர்த்துவிடும்.

அதன் பின்பு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கான வாய்ப்பிற்கும் இலங்கையின் ஒற்றுமைக்கும் அது முடிபு கட்டிவிடும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்குட்பட்டு நிற்க வேண்டும். மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்கள் தங்களுக்கு மிகுந்த கவலையளிக்கிறது என்றும், அதனை அமெரிக்கா மிகக் கடுமையாக எடுத்துக் கொள்ளும் என்றும் அந்த அறிக்கை எச்சரித்துள்ளது. (ந-5)

**இடம் மாற்றம்**

சகல விதமான சைக்கிள் உதிரிப்பாகங்கள், வீட்டு மின் இணைப்புக்கான (வயர், கோல்டர்,ரிப், மேய்ன் சுவிச், பியூஸ் பொக்ஸ்) பொருட்கள், மேசை, ஸ்ராண்ட், சுவரை மின் விசிறிகள், சாச்சர் லைட்டுகள், 6V பற்றிகள், 2 U, 3 U குமிழ், ரியூப் பல்புகள், ஸ்ரப்பிளைசர்கள், கிறைன்ரர்கள், காஸ் குக்கர்கள், பிறசர் குக்கர்கள், மண்ணெண்ணை குக்கர்கள், றைஸ் குக்கர்கள், கொட்பிளேற்றுகள், அயன்கள், அவண்கள், டோச்சுகள், தேமஸ், சண் பிளாஸ்குகள், புட்போல்கள், வோலிபோல்கள், கறம்போட்டுகள், அன்பளிப்பு அலங்கார பொருட்கள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

நியூ சிற்றி ரேடேர்ஸ், 319 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:-யாழ் நகரில் இந்த ஸ்தாபனத்துக்கு கிளைகள் இல்லை. T.P.021 222 3226 (C-2417)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.